
REGD 4642

# திராவிடநாடு

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய்நாடு 12 காசு

மலர் 9 | 23—7—50 | இதழ் 4

## வலிந்து இழுக்கிறது காங்கிரஸ்!




## மெலிந்து வாடுகிறான் விவசாயி!

சென்றவாரத் தொடர்ச்சி.

செய்திச் சித்திரம்

# திருடர்கள் இராஜ்யம்!

தில்லை-வில்லாளன்

சீமான் வஞ்சகம் பிள்ளை தனி இடத்திலே நின்று யோசித்தார், அவருக்குச் சிரிப்பும் வந்தது.

திருடர்களுக்கு ஒரு இராஜ்யம் — அதற்கு ஒரு மகாராஜா! அங்கே ஒரு சீமானின் விசாரணை, அவனுக்குத் தண்டனை! வஞ்சகப் பிள்ளையின் வாழ்வில் இம்மாதிரிச் சம்பவம் வருமென்றே எதிர்பார்க்கவில்லை. ஆனால் சம்பவம் நிகழ்ந்துவிட்டது!

அது மட்டுமா? அவரது காணாமற்போன மகள் அங்கே! மகனும் இருக்கிறான். திருட்டு ராஜா அவரது மருமகப்பிள்ளை! அத்தனையும் அவருக்கு ஆச்சர்யத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தன.

சிங்காரம் கேட்ட கேள்விகள் அவர் இதயத்தை ஈட்டிகள் போலத் தாக்கின—அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை! அவன் கேட்ட கேள்விகளுக்கு நேரான பதிலுரைகளைத் தந்துவிட வேண்டும் என்று பெருமுயற்சி செய்து பார்த்தார். முடியவில்லை.

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு ஏன் என்கிறான். அத்துடன் விடுவதாக இல்லை. ஆண்டவன் விதியென்றால் அந்த ஆண்டவனே அயோக்கியன் என்கிறான். இரந்து உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் என்று அறிஞர் ஒருவர் கூறியதாக ஒருநாள் கேட்ட நினைவு—சிங்காரம் பலே கள்ளன் மட்டுமல்ல—மகா அறிவாளி!

ஒருவன் சேர்த்து வைக்கிறான். இன்னொருவன் சோற்றுக்கழுகிறான். இந்த நிலை வளர்ந்தால் இல்லாதவன் இருப்பவனிடம் எடுக்கத்தானே தூண்டும்! அவன் தடுப்பானே என்பதற்காக மறைந்து ஒளிந்து எடுக்கிறான்—இரவில்! இது திருட்டாம்—அகராதியோடு செத்து மடியட்டும் அந்த எழுத்துக் குப்பை என்று பேசிவிட்டானே!

மேலும், அவர் மனம், அவரையே இடித்து இடித்துக் கேட்டது......

அவன் செய்வது திருட்டு என்றால், நான் பணம் படைத்தவனாக மாறியது எவ்வளவு பெரிய திருட்டு வேலை தெரியுமா? எத்தனை ஏழைகளை வாட்டி வதக்கி, அவர்களின் உழைப்பை உறிஞ்சி, வயலை வளமாக்கி, நெல்மணிகளைச் சேர்த்திருப்பேன். கடன் கொடுக்கிறேன் என்று கூறி வீடுகளை, நிலங்களை ஏலம் எடுத்திருப்பேன். இத்தனையும் போதாமல், கொள்ளையே அடித்தேனே. நான் மட்டும் எப்படித் திருடனில்லாமல் இருக்கமுடியும்? திருடனின் மாமனார்தானே!......

இப்படிச் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது.

அப்பொழுது சிங்காரி வந்தாள். தன் தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"தந்தையே, உங்களை இன்றாவது காணும் பாக்கியம் கிடைத்ததே—பெருமகிழ்ச்சிகொள்கிறேன்" என்று இன்பத்தால் வார்த்தைகள் திணறிடப் பேசினாள்.

"மகளே — மட்டற்ற மகிழ்ச்சி, நீ ஒரு அறிவு மகனின் அருகிலிருக்கும் காட்சியைக் காணும் பொழுது!"

"அவர் ஒரு திருடன் அப்பா" என்றாள், குறும்பாகச் சிரித்தபடி!

"ஆம், திருடன்தான்—என்னிடமிருந்து பெண்ணை, பொன்னை, பிள்ளையை மட்டுமல்ல—வஞ்சகப் புத்தியை, சூது மதியை, சூழ்ச்சித் திறத்தை—அத்தனையும் திருடித் தூக்கியெறிந்து விட்டான். எனது கஞ்சத்தனத்தை, 'கழிசடைக்' குணத்தையும் களவாடிக்கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டான். சிங்காரம் திருடன். ஏன்? என்னால் திருடனானான். என்னைப் போன்றவர்களால திருடனானான். அதுவும்குற்றம்புரியாஒருவனைக் குற்றவாளியாக்கினேன், ஆகவே அவன் சரி, இனி குற்றம் புரிந்தே வாழ்வோம் என்று இந்தத் திருடர் இராஜ்யத்தை ஏற்படுத்திவிட்டான். உடலுக்கு ஏற்ற உழைப்புத் தர வேண்டும், ஒவ்வொருவனும்—அவன் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவேண்டும் — தேவைக்கேற்ற அளவு அவன் சேர்த்துக் கொள்ள வேண்டும்—என்று நாடு கூறியிருந்தால் இந்த இராஜ்யம், பூஜ்யமாகியிருக்கும்! அந்த நிலை பிறக்க விடவில்லை, என்னைப் போன்றவர்கள்! ஆகவே, அவன் புரட்சிப் பாதையில் இறங்கிவிட்டான். எதனைச் சமூகமும், சர்க்காரும் குற்றம் என்று கூறுகிறதோ, சாஸ்திரமும், மற்றவையும் பாவமென்று பேசுகிறதோ அதனைப் புரியவே ஒரு மக்கள் கூட்டத்தைத் தயார் செய்துவிட்டான். குற்றம் எங்கள் மீதுதானம்மா"

"தந்தையே, நீங்கள்தானே பேசுகிறீர்கள்!" வியப்போடு கேட்டாள்.

"அவன் கொடுத்த தண்டனையே என்னை மிகவும் வாட்டுகிறது—உடலையல்ல, உள்ளத்தை! ஒழுங்காக தொழில் செய்ய ஒரு வழி வேண்டும் என்றானே — ஐயோ, நான் அழுகிறேன். இந்த மாதிரி எத்தனை வைரங்கள், மாணிக்கங்கள் உள்ளனவோ இந்தப் பூமியில்!" என்று உணர்ச்சியோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது சிங்காரம், ஏகாம்பரத்தோடு அங்கு வந்தான்.

"மாமா, தண்டனையை நிறைவேற்றும் நாள் நெருங்கிவிட்டது. ஏற்கத் தடையில்லையே!" என்றான்.

"இன்றே செய்யும். நீ தந்தது சிறு தண்டனை. இந்தத் திருடர் இராஜ்யத்தை இனி திருந்திய இராஜ்யம் என்று அழைப்போம். இங்கு ஆலை வைப்போம். அத்தனை பேருக்கும் வேலை தருவோம். நீ அதற்குத் தலைவனாக இரு. நான் அந்தக் காட்சியைக் கண்டு—ஆனந்தக் கண்ணீர்

விட்டுக்கொண்டே — அழுது கொண்டே இருக்கிறேன்."

"உங்கள் நெஞ்சுறுதியைப்பாராட்டுகிறேன். தண்டனையை இவ்வளவு பெரிய அளவில் ஏற்கும் துணிவு வந்ததே, உங்களுக்கு, அதைக் கண்டு ஆச்சர்யப்பட்டேன். ஆனால் அதுதானே முடிவு—அது வர, வேண்டுமானால் அதிக நாட்கள் ஆகலாம், ஆனால் ஒரு நாள் வந்து தானாக வேண்டும்! இப்படி சீமான்கள் இராஜ்யம் தீர்மானம் போட்டு விட்டால் திருந்திய இராஜ்யம் வளம் பெருகி வாழும்" என்றான்.

திருடர்கள் இராஜ்யத்தை விட்டு திருந்திய இராஜ்யம் அமைக்க அவர்கள் நடந்துகொண்டேயிருந்தனர் —இருட்டிலிருந்து, ஒளிக்கு — இருட்டிலிருந்து, தெளிவுக்கு—குற்றத்திலிருந்து, நற்குணத்திற்கு!

X X X

பகுத்தறிவு இராஜ்யத்திலிருந்து புறப்பட்டுச் சென்றேன். திருந்திய திருடரின் பூமியிலே ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரில் காணலாம் என்ற பேரவா என் இதயத்தை உந்த உந்த என் நடையிலே வேகம் அதிகமிருந்தது. நான் நடந்து போய்க்கொண்டே இருந்தேன்.

இரயிலடிக்கு அருகில் வந்துவிட்டேன். அங்கு ஏராளமாக மக்கள் குழுமியிருந்தனர். இரவு நேரம் ஆகவே நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தனர். ஒருவராவது தங்கள் பக்கத்திலே உள்ள மூட்டை முடிச்சுகளைப் பற்றிக் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. சிலர் இப்படியப்படி நடந்து சென்று கொண்டிருந்தனர். உருண்டு கிடந்த மூட்டைகளை உரிமையாளர் பக்கத்தில் எடுத்து வைத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தனர். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

இன்னும் சிலர் டிக்கட்டுகள் வாங்க முயற்சி செய்துகொண்டிருந்தனர். ஒழுங்கான வரிசையில் அவர்கள் காட்சியளித்தனர். அவர்களில் யாரும் பணங்கொடுக்கவில்லை. பெயர், ஊர், இருப்பிடம் என்ற விபரத்தைக் கூறிக் கையொப்பமிட்டனர். பிறகு அவர்கள் போகவேண்டிய ஊருக்கு டிக்கட் பெற்றுத் திரும்பினர்.

உள்ளே நுழைந்தேன் — அங்கு ஒரு பெரிய உணவுக் கடை இருந்தது. அதில் ஏதாவது சாப்பிடலாம் என்று பார்த்தேன். அங்கு யாரும் பணங்கொடுத்து எதுவும் வாங்குவதாகத் தெரியவில்லை. அவரவர் போவதும், வேண்டியதை வாங்கியுண்பதும் வெளியேறுவதுமாகவே இருந்தனர். எனக்கு அகோரமான பசி—எதையாவது தின்று தீர்க்க வேண்டும் போலிருந்தது! உடனே என் பையிலிருந்து நாணயங்களை எடுத்துக் கொடுத்து வேண்டியதைக்கேட்டேன். அவன்விழித்தான். பிறகு அவன் என்னை யார் என்று கேட்டான். பகுத்தறிவு இராஜ்யத்திலிருந்து வந்திருப்பவன். யாருடைய விருந்தினனாக வந்திருக்கிறேன் என்றும் அவன் அறிய விரும்பினான். உடனே சிங்காரம் அனுப்பியிருந்த அழைப்பைக்காட்டினேன். அவன் கொஞ்சம் வியப்போடு பார்த்துவிட்டு, நாணயங்களைத் திரும்பக் கொடுத்துவிட்டு, உணவுப் பொருள்களைத் தந்தான். உண்டேன். மகிழ்ந்தேன். மேலும் நடந்தேன்.

சிறிது தூரம் சென்ற பிறகு என் பையைத் தடவிப் பார்த்தேன். 'மணிபர்சைக் காணோம். பயந்து விட்டேன். இதனை எங்கு போய்ச் சொல்வது என்று புரியவில்லை. பிறகு விசாரித்தேன். ஊருக்கொரு ஆளும் நிலையங்களை உண்டாம். எல்லாவித குறைபாடுகளையும் அங்குதான் சொல்லவேண்டுமாம். போனேன். சொன்னேன். அவன் கடகடவெனக் கைகொட்டிச் சிரித்தான்.

"யாராவது எடுத்திருக்கக் கூடும்!" என்றேன்.

அவன் இன்னும் பலமாகச் சிரித்தான். எனக்குக் கொஞ்சம் கோபங் கூட வந்தது.

"பணம் போய்விட்டது என்கிறேன்—தாங்கள் சிரிப்பது அவ்வளவு நன்றாயில்லை!" என்றேன் கொஞ்சம் ஆத்திரத்தோடு.

"ஏன் பணம் போய்விட்டது?" என்றான் அவன் மீண்டும்.

"யாரேனும்......" என்று முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

"உமது அஜாக்கிரதையினால் தவற விட்டு விட்டு, பிறர் எடுத்து விட்டதாகக் கற்பனை செய்கிறீர்—அவ்வளவுதானே?" என்றான் சிற்றத்தோடு!

"இல்லை...ஆ..." என்று மழுப்பினேன்.

என்னை ஒரு இடத்தில் உட்காரச் சொன்னான். அமர்ந்தேன். அரை மணி நேரம் கழிந்து ஒரு ஆசாமி வந்தான். அவன் கையில் பர்சிருந்தது. வியப்பின் உருவமானேன்.

"ஐயா, எவனோ ஒரு ஏமாளி, தன் பொருளைக் காப்பாற்றாமல் போட்டுவிட்டான்" என்று கூறியபடி அதனை வைத்துவிட்டுப் போய்விட்டான். எனக்கு வெட்கமாக இருந்தது! அந்த அரசாங்க ஆள் என்னை அழைத்தான். நான் அருகில் சென்றேன்.

அவன் ஏளனமாகச் சிரித்தான் முதலில்—பிறகு பேசினான்.

"அந்நிய நாட்டிலிருந்து வந்திருப்பதால்தான் உமக்கு இந்தப் பணம் சுமந்ததோலை எங்கள் தேசத்திலே யாரும் அந்த வேலையைச் செய்வதில்லை. ஆனாலேவார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏமாளிகள் இருந்தால் ஏமாற்றுபவர் இருந்துதானே ஆகவேண்டும். இதில் தவறென்ன? நீர் ஏமாந்து போய் பணப்பையை விட்டுவிட்டு எவனோ எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்று புலம்பினீர். வீண் பழி சுமத்தினீர். இனியேனும் நீர் ஒழுங்காக இருந்து பிறர் குற்றம் புரியும்படி செய்யாமல் உதவி புரிய வேண்டும்" என்று சொன்னான். நான், மணப் பெண்ணைப்போல, தலையைத் தாழ்த்திக்கொண்டேன், தாங்கமுடியாத நாணத்தால்!

பிறகும் நடந்தேன். உடை வகைகள் விற்குமிடங்களுக்குச் சென்றேன். அங்கேயும் 'இதில் வியாபாரம்!

எங்கு திரும்பினும், பணம் இல்லாமல், வாணிபம் நடந்தபடி இருந்தது. பணத்திற்கு மதிப்பே இல்லை. என் பையிலிருந்த வெள்ளிப்பணங்கள் கேலி செய்துகொண்டிருந்தன! அந்தப் பணத்தை யாரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

பணத்தைக்கண்டு 'பல்லிளித்திடும்' பண்புடைய தசைப்பிண்டங்கள் யாருமில்லை! பணத்தை ஒரு பொருளாக மதிக்கவே இல்லை.

பணத்திற்கு வேலை என்ன?

பண்ட மாற்றுக்கு அது இடைக்காலத் தூதுவன்—சொத்தின் மதிப்பைச் சொல்லும் ஒரு கணக்கப்பிள்ளை.........இருந்தும், திருந்திய இராஜ்யத்தில் அதற்கு மதிப்பே இல்லை.

இதற்குரிய காரணங்களை அறிய வேண்டும் என்ற உள்ளத்துப் பேரிரைச்சலை என்னால் அடக்கவே முடியவில்லை.

வழியில் யாரேனும் வந்தால், அவர்களை விசாரித்து விடவேண்டும் என்று முடிவு செய்து கொண்டு நடந்தேன்.

வழியில் ஒருவன் வந்தான்.

"நண்பரே, எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும்" என்று கேட்டேன்.

"மன்னிக்க வேண்டும். இன்று வேலைகளைப் பிரித்து, மணி குறிப்பிட்டு விட்டேன். ஆகவே உங்களுக்கு உதவி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்" என்று கூறிக்கொண்டே நடந்துவிட்டான்.

பிறகு யாரோ என்னை கைதட்டியழைத்தார்கள். போனேன். முக மலர்ச்சியுடன் என்னை வரவேற்றான் ஒரு இளைஞன். சிங்காரத்தின் அழைப்பை எடுத்துக் காட்டினேன். அவன் சிறிது நேரம் அசைவற்றிருந்தான்.

"இந்தத் தேசத்துப் போக்கு மிக விசித்திரமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டான், சிரித்துக் கொண்டு!

"ஆம், ஆம்!" என்றவுடன் ஆவலோடு!

"அம்மாதிரி எண்ணம் பிறக்கத் தான்செய்யும், வெளிநாட்டவருக்கு! அதற்காகத்தான் இம்மாதிரி சிறு நிலையங்களை வைத்திருக்கிறோம், நிலைமைகளை எடுத்து விளக்க, திட்டங்களைத் தெளிவாக்க!" என்றான் அவன்.

"என் சந்தேகங்களைக் கேட்கலாமல்லவா?" என்றேன் தயக்கத்தோடு!

"தாராளமாக!" என்றான் அவன்.

"சிங்காரம் இத்தேசத்துத் தலைவனாயிற்றே—அத்தலைவனால் அழைக்கப்பட்ட எனக்கு இதுவரை வரவேற்று அழைத்துச் செல்ல ஒரு சிறு ஏற்பாடும் இல்லையே—ஏன்?' என்றேன்.

"காரணத்தோடு—தாங்கள் இங்கு வந்தது இத்தேசத்துத் திட்டங்களை நேரில்காண! விருந்துண்டு போக அல்ல—ஆகவேதான் அழைக்கவில்லை. உங்களுக்குக் குறையொன்றும் வந்துவிடவில்லையே!" என்றான் அமைதியாக!

"இல்லை—" என்றேன், அழுத்தமாக!

"இங்கு பணத்திற்கு மதிப்பில்லையல்லவா?"—எனது இரண்டாவது கேள்வி.

"பணத்திற்கு வேலை தாவில்லை நாங்கள்—ஆளுவோர், மக்களிடமிருந்து உழைப்பை வாங்கிக்கொள்கிறார்கள். அவர்களுக்குத் திரும்பப் பொருளாகத் தருவதில்லை. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து விடுகிறார்கள். பிறகு பணத்தினை ஏன் மக்கள் திரும்பிப் பார்க்கப் போகிறார்கள்?" என்றான்.

"உழைப்பு என்றால் தெளிவாகத் தெரியவில்லையே! கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?" என்றேன், மீண்டும்.

"நீங்கள் கேட்பது புரிகிறது. உழைப்பு என்றால் எல்லோருமொரே அளவில், ஒரே உருவில் உழைப்புதர முடியாது. மூளை உழைப்பாளிகளும் இருப்பார்கள். உடல் உழைப்பாளிகளும் உண்டு. அவரவர் திறமைக்கும், வலிமைக்கும் ஏற்ற அளவில் உழைப்பைப் பெற்றுக்கொள்வது—பிறகு அவர்களது தேவைக்கு ஏற்றவைகளை ஆளவந்தாரே செய்துதந்து விடுவது" என்றான்.

விடை பெற்றுக்கொண்டு வெளியேறினேன்.

மற்றொரு ஆளுவோர் நிலையத்தில் நுழைந்தேன்.

"இங்கு போலீஸ் இல்லையா?" என்றேன் திடீரென.

"தேவையில்லை!" என்றான் அந்தத்துடுக்குக்காரன்.

"சிறையுண்டா?" என்றேன் அடுத்தபடி.

"குற்றம் புரிபவர் இங்கு இல்லை—குற்றம் புரியவேண்டிய அவசியமும், சூழ்நிலையும் கிடையாது!" என்றான்.

நடந்தேன் மேலும்!

கடைசியாகச் சிரித்துக்கொண்டே வரவேற்றான் சிங்காரம்.

பார்த்து முடிந்துவிட்டதா, எங்கள் விசித்திர தேசத்தை?" என்றான்.

"பார்த்தேன், பார்த்தேன்—பாராமல் எப்படி இங்கு வரமுடியும்." என்றேன், கொஞ்சம் சலிப்போடு.

"தங்களை அழைத்து வரவில்லை—அதற்காகக் கோபங் கொண்டிருக்கிறீர்கள்—நன்றாகத் தெரிகிறது. அப்படி நான் செய்திருந்தால் இப்பொழுது கிடைத்த அனுபவம் பாழாகப் போயிருக்கும்."

"சிங்காரம், சிறையும், படையும், தண்டனையும், நீதி மண்டபமும் இல்லாமல் ஒரு நாட்டு மக்களை எப்படி ஆள்வது?" என்றேன்.

"என் நாட்டவர் திருந்தியவர்—தீமையிலிருந்து நடந்து வந்து விட்டார்கள்!" என்றான் அவன்.

"இருந்தாலும்..."

"மனிதன் ஏன் குற்றம் செய்கிறான்? எண்ணிப் பாருங்கள். அந்தக் காரணங்களைக் கண்டுபிடித்தேன். அவை ஏற்படா வகையை உண்டாக்கிவிட்டேன்."

"குற்றம் புரிவது மனித இயற்கையென்பார்களே!"

"அது உங்கள் நாட்டில்—"

"ஆமாம், எங்கள் நாட்டில் குறையுள்ள மனிதர்கள் இருக்கிறார்கள்."

"அதனால்தான், அவர்களுக்குத் துணை புரிய கடவுள்கள் கணக்கில்லாமல் வாழ்கிறார்கள். எங்கள் தேசத்தில் அவர்களுக்கு வேலையில்லை. இருள்மாதேவி ஓடிமறைந்துவிட்டாள். உழைப்பு இங்கு தெய்வம்—உரிமை வாழ்வுதான் இங்கு தேவை." என்று முடித்தான் அவன்.

சிங்காரி வந்தாள்.

"தோழரே, வணக்கம்" என்றாள்.

"நம் நாட்டைப் பார்க்கவந்துள்ளார்" என்றான் சிங்காரம்.

"பாதி பார்த்திருப்பார்......" என்றாள் குறும்பாக.

"ஏன்?"

இருவருமே கேட்டோம், ஒரே நேரத்தில்!

"ஆண்களின் நிலையை ஆராய்ந்திருப்பீர்கள். பெண்களைப்பற்றி எண்ணிக்கூட இருக்க மாட்டீர்களோ!" என்றாள் அவள்.

"ஓ்கோ" என்றேன்.

(16-ம் பக்கம் பார்க்க)

## யுத்தம்

16-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படி விதவிதமான காரணங்களைக் காட்டி, வகைவகையான போர்க் குறிப்புகளை நீட்டுவர். நாமும் வரலாறு படித்தவர்கள்—வாழ்ந்த மன்னர்களைப்பற்றி அறிந்தவர்கள்—நிகழ்ந்த போர்களை நினைவில் நிறுத்தியவர்கள் ஆகவே, புதியன அல்ல அவை, நமக்கு! எனினும் போர் வேண்டும் என்று பேசிடும் போக்குப் பிடிக்கவில்லை.

இன்னும் ஒரு விசித்திரம் பாருங்கள். உலகு முன்னேறி வருகிறது—நாகரீகம் நல்ல பாதையில் ஓடுகிறது—மனித உழைப்புக் குறைந்து, மூளை சக்தியின் மூலம் நன்மைகள் பெருகுகின்றன — விஞ்ஞானம் விநோத விளையாடல்கள் புரிந்து வேடிக்கை காட்டுகின்றது — மனிதன் முழு மனிதனாகிறான் — முழு மனிதன் 'தேவனா'கி விடுவான் போலிருக்கிறது — சந்திர மண்டலத்திற்கு குடிபோய் விடுவான் போலிருக்கிறது—செவ்வாயைச் சென்று தரிசிப்பான் என்று கூடப் பேசப்படுகிறது-எனினும் போர் ஒழியவில்லை.

சிறு நாடுகளில் நடந்த சண்டை, உலக நாடுகளை யெல்லாம் கட்டிச் சேர்த்துவிட ஆரம்பித்துவிட்டது. காதப்போர், நூறாண்டுப் போர், சுதந்திர போர் என்று பெயரிட்டது போய் உலகப் போர் என்று கூற வேண்டிய நிலை பிறந்துவிட்டது.

அரசு அமைக்க, அந்நியரை விரட்ட, உரிமை பெற, வாணிகம் வளமாக...என்றுகாட்டிய காரணங்களோடு புதியதொரு காரணத்தையும் இணைத்துவிட்டார்கள். சொன்னால் சிரிப்பு வரும். யோசித்தால் திகைப்பு வரும். அமைதியை நிலைநாட்ட யுத்தமாம்! சமாதானத்தை ஏற்படுத்தச்சண்டையாம்! அதுதான் உலக மகா யுத்தங்களுக்கு முதற் காரணமாம். எப்படி?

X X X

போர் வேண்டாம் என்கிறார்கள் மக்கள். சமாதானத்தை நிலைநாட்ட மட்டும் சண்டை போடலாம் என்கிறது உலகு!

முதல் உலகப் போரும் இப்படித் தான் ஏற்பட்டது.

உலகத்தின் தலையாய நாடுகள் எல்லாம் போரில் ஈடுபட்டன. துணிவு மிக்க ஜெர்மனி துவக்கி வைத்தது. பெல்ஜியம், பின்வாங்கிப் பிறகுபாய்ந்தது. பிரஞ்சு தேசமும் போரில் கலந்தது. ரஷ்யர்களும் போரிட்டனர்—இத்தாலியும் இதில் இரண்டறக்கலந்தது. பிறகு ருமேனியாவும் தன்பங்கைச் செலுத்த முன்வந்தது இங்கிலாந்தும், அமெரிக்காவும் போரில் இறங்கின, கடைசியில்!

1914—18 நடந்த இந்தப்போர், ஒரு கொடிய நோய் — அழிவின் ஊர்த்துவத் தாண்டவம்தான் எங்கெங்கும்! "ஐயோ........." என்ற பதைப்பு! "மடிந்துவிட்டானே, என் மகன்" என்ற அழுகுரல். "இனி நான் என்ன செய்வேன்?" என்ற புலம்பல். "எங்க குடும்பம் நாசமாய்ப் போச்சே;" என்ற ஒப்பாரி — அப்பப்பா, கண்ணீர், அழுகை, சோகம், துக்கம், ஏக்கம்......எங்கு பார்த்தாலும் இவைகளின் ஆட்சி!

எதைக்கேட்டாலும், இல்லையென்ற பல்லவி!

போரிலே ஈடுபட்ட வீரரின் தொகைமட்டும் ஆறரைக் கோடி—அதில் மடிந்தவர் ஒருகோடி. 'மூளி' யானோர் மூன்றுகோடி. சாவைத் தழுவிய சாதாரண பொதுமக்கள் ஒன்றரைக் கோடி. அனாதைகளானோர், ஆதாரமிழந்தோர் இரண்டரைக்கோடி.

வெர்சேல்ஸ் என்ற இடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

அடுத்து வந்தது புதியதோர் போர் அலை—1938ல்! இட்லர்என்ற செருக்குக் கொண்ட ஜெர்மனியின் தலைவன் இதற்குக் காரணமானான். இது முன்னதைவிட எல்லாத்துறையிலும் வேகமாக, விறுவிறுப்பாக இருந்தது.

அழிவு வேலையில் அதை மிஞ்சிவிட்டது!

இரண்டாவது உலக யுத்தம் என்ற பெயரை அடைந்துவிட்டது.

விஞ்ஞானம் வெறும் அழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்யவே பயன் படுத்தப்பட்டது.

அது ஒழிந்து, அமைதியை நாடி மக்கள் யாத்திரை கிளம்பினர். இதோ மற்றுமா ஒரு போர்—உலக யுத்தம் என்று திடுக்கிட வைக்கும் குரல் கேட்கிறது!

யுத்தமின்றி எதுவும் செய்ய முடியாது என்றுபேசிடுவோருக்குப் போரின் இந்தத் தொடர்ச்சிச் சித்திரம் தான் தெரியும். மற்றவை தெரியாது. அவர்கள் குருடராகி விடுவர், சில சமயங்களில்! போரின்றி உலகில் வாழ முடியும்—வாழ வேண்டும்! மனிதன் வளர்ந்துவிட்டான் என்றால் யுத்தத்தை ஒழித்துக் கட்டவேண்டும். காட்டுக் குணமும், முரட்டுப் போக்கும், முட்டிக் கொள்ளும் பிடிவாதமும், எடுத்ததற்கெல்லாம் அடி, உதை, குத்து வெட்டு என்று கூவிடும் குணக் கெட்ட கோபமும், ஆகா, அப்படியா சொன்னான், அவனைப் பார்க்கிறேன் ஒருகை என்ற ஆத்திரமும் அடியோடு அழிக்கப்பட வேண்டும்.

உலகு இந்த நல்ல பாடத்தை உணரும் நாள் வெகு விரைவில் வரும். ❁

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் முடிந்ததும் 'நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்' என்று விட்டு விடுகிறதா? இல்லையே! அதைப் போலத்தான் இதுவும்" இதுபோலக் கிடைத்திருக்கிறது — மேற்படி மாநாட்டில் ஒருவர் பேச்சின் மூலமாக, பதில்.

சர்க்காரைச் சாக்குக்கு இழுக்கிறார்கள்—தாங்களும் 'சிறு சர்க்கார்கள்' என்ற எண்ணம் போலும்! பரம்பரைப் பாத்தியதை என்ற போலிக் கோட்டைமீது நின்று கொண்டு கொக்கரிக்கின்றனர் — வீராப்பை வீசுகின்றனர்!

மறுமலர்ச்சியும் புத்தெழுச்சியும் புயலாகி வருகிறதென்று அறிந்தும்—ஊரும், ஓயும் சென்றபாதைக்கே திரும்புகின்றனர்!

இது ஆபத்து-பேராபத்துக்கு அஸ்திவாரம் போடுவது என்று எச்சரிக்கிறோம்.

நிலப் பிரபுத்துவத்தின்மீது கட்டப்பட்ட கோட்டைதானே இந்தக் காங்கிரஸ் ஆட்சி என்ற காரணத்தால் பண்ணையார்கள் மிரட்டலாம். மிரட்டலுக்கும் - தீட்டிய திட்டத்துக்கு மிடையே வேற்றுமை விரிவதைக் கண்டு ஆளவந்தாரும் அவர் தம் சகாக்களும் கலங்கலாம்-கஷ்டமாக யிருக்கிறதே இடபிரச்னையைச் சமாளிக்க என்று காலத்தைக் கழிக்கலாம்!

ஆனால் உரிமைக் கீதம்-ஒரு தொடர்கதை. விடிவெள்ளி எழும்பும் வரையில் விடாது ஒலிக்கவே செய்யும்—அதை மறந்துவிடக் கூடாது—அவர்கள். ✱

# சூழல் விளக்கு

குறைத்துக் கொண்டனர்!

உதவி மந்திரிகள், நீதிபதிகள் உட்பட அநேகர், தங்கள் சம்பளங்களைக் குறைத்துக்கொள்ள முன்வந்துள்ளனராம். கனம் பட்டேலின் வேண்டுகோளுக்கிணங்க இந்தக் குறைப்பு வேலை நடந்திருக்கிறது. குறிப்பாகச்சில ஐரோப்பிய ஜட்ஜுகள் தாமே விரும்பிச் சம்பளக் குறைவை ஏற்றனராம். பட்டேல் பாராட்டியிருக்கிறார். பட்டேல், வேண்டுகோள் விடுத்தார். பாராட்டுரை தந்தார். ஆனால் தானே முன்னிருந்து வழி காட்டவில்லை—இதை மட்டும் நினைவில் நிறுத்துங்கள்.

சீக்கிஸ்தான்!

பாஞ்சாலத்தில் சிக்கியர்களுக்கு ஒரு சுதந்திர அந்தஸ்து உள்ள ராஜாங்கம் வேண்டும் என்று அகாலி சிக்கியர் கட்சித் தலைவர் மாஸ்டர் தாராசிங், தான் புது டெல்லியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது, குறிப்பிட்டார். காங்கிரஸில் இந்துக்கள் ஆதிக்கம் அதிகம். சிக்கியர்களுடைய கலாசாரத்தையும், மொழியையும், பண்பு, பழக்க வழக்கங்களையும் வளர்க்கத் தனிநாடு தேவை — சிக்கியர்கள் வாழ ஒரு வழி —அது சிக்கிஸ்தான் என்று பேசியுள்ளார். இந்துஸ்தான், பாகிஸ்தான், சிக்கிஸ்தான்......பட்டியல் வளர்ந்துகொண்டே போகிறதல்லவா?

பயம் – ஆசை – கொள்கை

பம்பாய் உள்நாட்டு மந்திரி மொரார்ஜி தேசாய் கூறுகிறார். கவனம், கவனம்! காங்கிரஸில் சேருங்கள். ஆனால் அவர் மிரட்டுகிறார், இவர் மிரட்டுகிறார், அந்தப்பயத்தை ஒழித்துவிடலாம் என்ற எண்ணத்தோடு சேராதீர்கள். அல்லது அந்தப் பதவியைப் பிடிக்கலாம், இந்தப் பட்டத்தை அடையலாம் என்ற ஆசையோடும் வராதீர்கள்—என்கிறார். பரிதாபம்! இவைகள்தானே, இன்று காங்கிரசின் திட்டங்கள், கொள்கைகள்! கொள்கைக்காக வாருங்கள் என்று அழைத்தாலும், கதை இதுதானே!

திரும்பிவிட்டார்

கண் வலியும், கருத்து நலிவும் தீர்ந்து மீண்டும் அன்பர் ஆச்சாரியார் திரும்பிவிட்டார் டெல்லிக்கு! கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து 'கனம்' மந்திரியாக 'பிரமோஷன்' பெற்றுவிட்டார் — வேலை குறிப்பிடாத நிலை—இருந்தும் அரசியல் வித்தகராம், ஆகவே அவர் அருகில் இருக்க வேண்டும் என்று கூறி அழைத்துக்கொண்டு சென்றுவிட்டனர். அவருக்கோ உடல் நிலை சரியில்லை. அவர் இல்லாவிட்டாலோ மத்திய சர்க்காருக்கு உள்ள நிலை சரியாக இருப்பதில்லை. ஆகவே வலியை மறந்து திரும்பிவிட்டார்!

சேராத ஜோடிகள்!

இந்தியாவுடன், இன்னமும் பிரஞ்சு சர்க்காரின் ஆட்சியிலே உள்ள பாண்டிச்சேரியும், போர்ச்சுகீசியர் பிடியிலே சிக்கியுள்ள கோவா, டையூ, டாமன் போன்ற இடங்களும் சேரவில்லை. சேரும் எண்ணமும், சேரவிடக்கூடாது என்ற பிடிவாத ஆசையும் மோதி மோதி ஓய்கின்றன, முடிவே இல்லாமல்! இவை சேராத ஜோடிகளாகவே இருந்ததில்லை—சேர்ந்திருந்து பிறகு பிரிந்தவை, அதுவும் வந்தவர்களால், வஞ்சகம் புரிந்து வெவ்வேறான ஆட்சிக்கு போனவை—என்று வரலாறு கூறுகிறது.

தண்ணீரைத் தேடி......

தண்ணீரைக் காண ஆளவந்தார் எத்தனை தந்திரங்களை, மந்திரங்களைக் கையாளுகிறார்கள்! பாவிகள் நிறைந்து விட்டார்கள், பருவமழை கெட்டுவிட்டது என்றார் ஒருமந்திரி. மரமில்லை, மழையில்லை, மாமகோற்சவம் நடத்துங்கள் என்று ஒரு 'கனம்' தந்து விட்டார் புதுத் திட்டத்தை! வருணஜபம், மழைதவம் செய்யச் சொல்கிறார்கள் சாஸ்திரம் நம்பிடுவோர். இப்பொழுது 'பானிவாலா மகராஜ்' வரப்போகிறார் சென்னைக்கு! அந்த யோகியின் பெயர் விபாசா. அவரது பிரதாபங்களை முன்வழி எடுத்துரைத்தார். பக்தவக்சலம் அவரைச் சென்னைக்கு அனுப்பும்படி வேண்டிக் கொண்டார். அவர் கண்களை மூடிக் கொண்டே இங்கேபாறை இருக்கிறது, நீர் ஊற்று ஓடுகிறது என்று பூமிக்கடியில் புதைந்து கிடப்பதையும் சொல்லி விடுவாராம். தண்ணீரைத்தேடி இவர்கள் ஓடும்பாதை மிக வேடிக்கையாக இருக்கிறது!

கழுவாய் தேடுகிறார்!

ஐ. நா. சபையின் அவசரத்தீர்மானத்திற்கு இந்தியா திடீரெனத் தன் ஆதரவைத் தந்தது கண்டு, நேர்மையாளர்கள் எல்லோரும் கண்டித்தனர். ஒரு சார்பு தீர்ப்புத் தமறுக்கும் ஏடுகள் எல்லாம் ஒருமுகமாக நின்று எதிர்த்தன. நேரு பார்த்தார். நிலைமையை உணர்ந்தார். தவறைத் தெரிந்துகொண்டு கழுவாய் தேடினார் இரண்டு கடிதங்கள் மூலம். கொரியாப் போரை நிறுத்த வேண்டும் என்று ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். ரஷ்யா விடையனுப்பி யிருக்கிறது. அமெரிக்காவும் தன் எண்ணத்தைச் சொல்லும். நேருவின் காலங் கடந்த இந்தத் தெளிவைக் கண்டு மகிழ்கிறோம் நாம். பாராட்டுவார்கள், நாட்டுநலம் விரும்பிகள் எல்லோரும்.

இது உண்மையா?

கொரியாவில் நடந்து வரும் போரைப் பற்றி நமக்கு அளிக்கப்படும் செய்திகள் எல்லாம் அமெரிக்காவுக்குத் தோல்வி என்று தொனிக்கும்படியே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ரஷ்யர் முன்னேறுகின்றனர், தாக்குகின்றனர், முறியடிக்கின்றனர் என்று செய்திகள் குவிகின்றன. இவை உண்மையே என்று சந்தேகிக்கிற அளவு தகவல்கள் தருகின்றனர். அரசியல் ஆரூடக்காரர்கள் இன்னும் பயங்கரச் சந்தேகத்தைக் கிளப்புகின்றனர். அணுகுண்டு வீசி, அழிவு வேலையில் ஈடுபட ஒரு முன்னேற்பாடு என்று கூடச் சொல்கின்றனர். அணுகுண்டு வீசியாவது, அமைதியை நிலை நாட்டவேண்டும் என்று கூக்குரல் ஒரு புறம்—ரஷ்யா, மிருகத்தனமாக முன்னேறுகிறது இன்னொருபுறம் — இரண்டையும் சேர்த்துப் பார்க்கிறபொழுது, நம் சந்தேகம் இது உண்மையா என்று கேட்கத் தோன்றுகிறது. ✲

# "கைதி"

திகைக்கிறான் — திண்டாடுகிறான்! கட்டிலிலே நோய்க்கு இரையாகிக் கிடக்கும் தாய், இளமை கொழிக்கும் தங்கை, 'எங்கேடா, என்கடன்?' என்று மிரட்டி அதட்டும் கடன் தொல்லை, 'கிஸ்தி கொடு — இல்லேன்னு எல்லாம் ஏலத்துக்குப் போய்விடும்' என்று சட்டத்தைத் தன் குரலில் காட்டும் சர்க்கார் சிப்பந்தி, 'தலைதிவசம் வந்து விட்டதடா, வீரப்பா! மறந்துடாதே— உன் தோவப்பன் சாஸ்திரோக்தமா சகலகாரியங்களையும் நடத்தினவன். கஷ்டப்பட்டு உனக்காகச் சம்பாதிச்சு வைச்சவன். அவன் ஆத்மா சாந்தியடையணு மேன்னோ! பிதுர் பாவம் பொல்லாதடா—பேசாதிருந்துடாதே. நல்லா விமரிசையா நடத்து!" என்று சாஸ்திர சம்பிரதாயத்தை நினைவூட்டும் புரோகிகர்—இத்தகைய சாட்டி முனைகள் ஏழையை நோக்கி வீசப்படுகின்றன! வீரப்பன் — ஒரு விவசாயி, என்ன செய்வான்? தூண்டிலில் சிக்கிய மீன் போல, துவள்கிறான்— துடிக்கிறான், 'என்ன செய்வேன்?' என்று அலறுகிறான்!

"இங்ஙனமாகத்தானே ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் தனது பிராட்டியாருடன் பக்தனைச் சோதிக்க எழுந்தருளுகிறார். பக்தன் திருமங்கையோ வழக்கம்போல அவர்களையும் மிரட்டி, பொருளைக் களவாடுகிறான்......" என்று கதாகால க்ஷேபம் நடத்துகிறார் பாகவதர். மழைக்காகக் கோயிலுக்குள் ஒண்டிய வீரப்பனின் காதில் காலக்ஷேபம் விழுகிறது — கவனிக்கிறான். பாகவதர், திருமங்கையாழ்வாரின் திவ்விய குணப் பிரதாபங்களை விவரிக்கிறார், "ஏன் திருடினார்? தனக்காகவா —இல்லை! தன் தாய் தந்தையருக்காகவா-இல்லை! உற்றார் உறவினருக்காக—அதுவும் கிடையாது! பின் ஏன் தெரியுமா — திருவரங்கம் பெரிய கோயில் திருப்பணிக்காகத்தான். என்னே அவரது பக்திப் பிரவாகம்! திருடியாவது தெய்வ சேவையிலீடுபட்ட அவரது பெருமைதான் என்னே!" என்று விவரிக்கிறார்.

வீரப்பன் சிந்தனை தடுமாறுகிறது —கூட்டங்கலைந்தும் அவன் போகவில்லை! கோயில் சந்நிதானத்தில் கவனிக்காமல் விட்டுச்சென்ற தங்கத் தாம்பாளம் கண்ணில் படுகிறது. ஏழ்மை அவனைத் திருடனாகத் தூண்டுகிறது—திருடன், திருமங்கை ஆழ்வார் ஆகியதை எண்ணுகிறான், 'இல்லாததால்தானே எடுக்கிறேன். அதுவும் எங்கும் நிறைந்த பரம்பொருளான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் பொருள்தானே இது. சர்வலோக நாயகரான அவருக்கு இந்தச் சிறு தாம்பாளம் ஒரு பெரிசா? ஏழையான என் மீது இரங்கி அவர் என்னை மன்னித்து விடுவார். கொள்ளையடித்த திருமங்கையைச் சோதித்து பக்தனாக்கிக் கொண்ட அந்தப் பரம்பொருள், துடித்துத் தவிக்கும், என்னை மன்னிக்கவே செய்வார்!" என்று அவனது ஏழ்மையுள்ளம் வாதாடுகிறது.

எடுக்கிறான்—விற்கச் செல்கிறான்! அங்கே, பரம்பொருளுக்குப் பாத்தியதையான தாம்பாளம் தங்கத்தாலானது அல்ல — முலாம் பூசப்பட்டது என்று வெளியாகிறது!

வீரப்பன் "கைதி"யாகிறான்—பல குற்றங்கள் சாட்டப்பட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அவனுக்கு 'நீதி' யாகக் கிடைக்கிறது!

X X X

கருத்தைக் கவரும் இக்காட்சியோடு உலகப் பிரசித்திபெற்ற 'ஏழை படும் பாடு' என்ற விக்டர்ஹ்யூகோவின் நாவலைத் தழுவி — தஞ்சை நண்பர் A. K. வேலன் தமிழ்நாட்டுக்கேற்றவகையில் தீட்டிய "கைதி" என்ற கருத்தோவியம் 17—7—50 அன்று தஞ்சை இராமனுதன் செட்டியார் மண்டபத்தில் சி. என். அண்ணாதுரை தலைமையில் அரங்கேற்றப்பட்டு ஐந்து நாட்களாக தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், அன்பழகன், தியாகராஜபாகவதர், என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் நடிக்கப்பட்டது.

வீரப்பன் வேண்டுமென்றே திருடவில்லை—தாசிக்காகக் கோயில் சொத்தைக் களவாடிய விப்ரநாராயணர் அல்ல, அவன். ஆயினும், குற்றவாளியாகிறான்—கொடுமைக்கு ஆளாகிறான்! சிறையில் வாடும் அவனுக்கு, வீட்டிலே படுக்கையில் கிடந்ததாயும், பரதவித்து நின்ற தங்கையும் நிமிடத்துக்கொருமுறை நினைவிலே தோன்றியவண்ணமே இருக்கிறார்கள். புயலும் இடியும் அவனைப் புலியாக்குகிறது! தாயின் பாசமும், குமரிச் செல்வம் போன்ற தங்கையின் நிர்க்கதியும் 'கைதி'யைத் தப்பச் செய்கிறது! பன்னிரண்டு ஆண்டுகளைச் சிறைக்குள் கழித்து, தனது வாலிப நேரத்தை வீணுக்குவதா—என்ற வேதனையோடு வெளியேறுகிறான்!

சிறைக்குள் சிதைந்த சில ஆண்டுகளில், வெளியில் நிகழ்ந்த மாற்றங்களை அவன் அறிய முடியவில்லை. தாயும் தங்கையும் இருந்த வீடு தரை மட்டமாகிக் கிடக்கிறது— தாய் செத்துவிட்டதாக அக்கம் பக்கத்திலுள்ளோர் சொல்கின்றனர். துடிக்கும் அவனுக்குத் தன் 'தங்கை என்னவானாள்?' என்பது புரிய முடியவில்லை!

இந்நிலையில் சிறைக்குள் வாழ்ந்ததால் ஏற்பட்ட தாடி மீசை முதலாய உருமாற்றங்களுடன் வெளியில் உலாவும் அவனை உலகம் கண்டு வெறுக்கிறது—'பிச்சைக்கார நாயே!' என்று தூற்றுகிறது, 'போடா திருடா' என்று விரட்டுகிறது. பசியும் சோகமும் தாக்கப் பரிதவிக்கும் அவன் வாழ்வில் எதிர்பாராத ஒரு சம்பவம் நடக்கிறது. அச்சம்பவத்தால் ஏழை வீரப்பன்—நாடு போற்றும் நல்ல நாயகமாக ஆகிறான்! நகரத் தந்தையாகப் பாராட்டப்படுகிறான்!!

'ஒரு பிடி சோறு!' என்று உரத்துக் கூவித் திரிந்தபோது உபசரிக்காத ஊரார் நல்ல நாயகத்தைப் போற்றுகின்றனர். செல்வம் குவிவதைப் போலவே பேரும் புகழும் குவிகிறது!

விவசாயி வீரப்பன்—நல்ல நாயகமாக உலவுகிறான். தான் தேடிய செல்வத்தை எல்லாம் மக்களுக்காகச் செலவிட்டு மதிப்போடு வாழ்கிறான்.

அவன் வாழ்க்கையில் இத்தகைய மாற்றத்தைத் தந்த அடிகள் அருளானந்தரிடமே வளர்ந்த வீரப்பன் தங்கை முல்லை — சர்க்கார் உத்தியோகஸ்தரான போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மனைவியாகிறாள். அண்

(12-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 23—7—50 [காஞ்சி

## கொடுமை! கொடுமை!!

✻

சூது நிரம்பியதல்ல அவர்கள் பாதை; சூழ்ச்சியைக் கருத்தாலும் தீண்டாத காளைகள்! துயரமும் சோகமும் பின்னிப் பிணைந்து கிடக்கும் வழிகெட்ட சமுதாயத்தின் முரசொலி வீரர்கள்! துடிக்கும் இளமையால் தொண்டு செய்யப் புறப்பட்டு மக்கள் மன்றத்தை மகிழ்விக்கும்மணிவிளக்குகள்!

'நேர்மை, நீதி, நியாயம்' ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டு வீழ்ந்து கெட்ட சமுதாயத்தை வீரபுரியாக்கும் விவேக வேலையில் சுற்றித் திரியும் சுதந்திரப் புறாக்கள்!

அவர்களுக்குச் சிறைவாசம்-கடுங்காவல்! அபராதம்!!

கேட்கவே, நடுங்குகிறது—நல்லோர் என்று கூறி நாடாள வந்தோரின் போக்கை! எழுத்துச் சுதந்திரம் பேசி, ஆட்சிப் பீடம் அமர்ந்தோரின் ஆட்சியில் எழுத்து மூலம் தன் கருத்தைக் கூறியமைக்காக வழக்கு—தண்டனை!

நீதி சிரிக்கிறது-ஆட்சியாளரைப் பார்த்து! நேர்மை தலை குனிகிறது அகிம்சா வீரர்களைக் கண்டு!!

ஆறுமாதமாம் ஆசைத்தம்பிக்கு மூன்று மாதமாம் கலியபெருமாளுக்கும் தங்கவேலுக்கும்!

கடுங்காவல் தண்டனையாம—அதோடு ஐந்நூறு ரூபாய் அபராதம் வேறும்!

நினைத்தால் — நெஞ்சு குலுங்குகிறது. பொதுவாழ்வுப் பாதையின் பெருமையைக் குலைக்கும் காங்கிரஸ் ஆட்சியின் கண்மூடிப் போக்கைக் கண்டு எதிர்காலம் ஏளனம் செய்யும்! இழித்துப் பேசும்!!

'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலை எழுதினார் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி. அதை வெளியிட்டார் தோழர் கலியபெருமாள்.

'அழியட்டுமே திராவிடம்' என்ற நூலைத் தந்தார் துறையூர் தோழர் து. வீ. நாராயணன் — நூல் வெளிவருமுன் ஆட்சியாளரின் அடக்கு முறைப் பாணம் பாயுமுன் சாவுக் குகைக்குச் சென்று விட்டார்! மறைந்த நண்பரின் நூலை வெளியிட்டார் தோழர் தங்கவேல்.

இவை குற்றமாம்—கூறி வழக்குத் தொடர்ந்தது காங்கிரஸ் ஆட்சி. இப்போது, அவர்கள் சிறைக்குள்ளே மூடப்பட்டுவிட்டார்கள்!

வேல்கொண்டல்ல, வேற்றுமை மனத்தாலல்ல; பொதுச் சேவையின் ஆர்வத்தால், மக்களுக்குப் பணியாற்றும் ஆசையால், எழுத்துக்கள் மூலம் சேவை செய்ய விரும்பிய அவர்களை 'சிறைச்சாலை'க்கு இழுத்துக் கொண்டுவிட்டனர் — கருணை மூர்த்திகள்!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்டிவிட்ட சிறைச்சாலை' என்ற எஃகு உள்ளம்கொண்ட இதயத்தோர் அவர்கள். எதற்கும் அஞ்சாப் புலிகள்! தங்கள் இலட்சியப் பாதையில் கிடைத்த இந்த அம்பு வீச்சைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்ல.

ஆனால், சுதந்திரத்தைப் பறித்து, சிறைக்குள்ளே வீழ்த்திய 'சுயராஜ்ய சர்க்காரின்', முரட்டுப் போக்கை நாடு கண்டிக்காமல் விடாது! நல்ல பாடம் கற்பிக்காமல் போகாது!!

வீசுங்கள் பாணங்களை — விரண்டோடும் கோழைகளல்ல நாங்கள்— வீரரின் பெரும் படை!

தியாக முத்திரையைப் பெற்றுக் கொண்டுவிட்ட சிங்கங்கள் மூவரையும் வாழ்த்துகிறோம் — பாராட்டுகிறோம்! அதோடு 'தோள் தட்டி நிற்கிறோம்—எமக்கு தூசு உமது அடக்குமுறை' என்பதை எச்சரிக்கையாகத் தருகிறோம் இந்த ஆளவந்தாருக்கு!

✻

வீம்புபேசும்

11-ம் பக்கத் தொடர்ச்சி

எப்படியடித்துக்கொண்டதோ யார் கண்டார்கள்?

மேலே நாம் தீட்டிக்காட்டினோமே சிலகாட்சிகள் அவைகள்மட்டுமல்ல இப்போது நடப்பது. இந்தக்காட்சிகளின் விளைவாக, கூடிக்கலைந்த இக் 'குபேரப் பிரதிநிதிகள்' வாழ்க்கையில் அவ்வளவாகச் சலனமும் சங்கடமும் ஏற்படுவதுகூட இல்லை. எடுபிடிகள், சிறு மிராசுதார்கள், அவர்களின் கையாட்கள் ஆகியோர்தான் தலையிலே காயம், எலும்பு முறிந்த கால்,வெட்டுண்ட கை இவைகளோடு காட்சி தருவர்!

ஆனால், மேலும் சில சம்பவங்கள் இப்போது நடக்கின்றன — அவைகளை அறியாதவர்கள் போல இந்த 'அன்பர்கள்' கோரியிருக்கின்றனர் 'எப்போதும்போல நடக்கவேண்டும்' என்று! அதிகாரத் தர்பார்—பெரிய பண்ணையென்பதால் தனக்குச்சுற்று வட்டாரத்திலுள்ளோர் அடங்கிக் கிடக்கவேண்டும் என்ற ஆணவம்—அதன் விளைவாகப் பல விபரீதச் செயல்கள் ஆகியவை மட்டுமல்ல இப்போது நடப்பது? இன்னுஞ் சில உண்டு—அதை எண்ணினாலே கலங்குவர், இந்தக் கனவான்கள். எனினும் வீண் பிரதாபத்தை இழக்கவில்லை!

பூனைபோல் கிடந்தவன் புலியாகியிருக்கிறான்!

'உழைப்பை உறுஞ்சுகிறார்கள் இவர்கள்' என்பதை உணர்ந்துவிட்டான்!

அடங்கிக்கிடந்த காலம் மலையேறிவிட்டது!

எதிர்த்தால்—அடி!
அடித்தால்—கொள்ளை!
முறைத்தால்—தீ!

இது போன்றவைகள் 'இப்போது, ஆரம்பமாகிவிட்டன!

வயலிலே புயல்—பண்ணைகளிலே பதட்டம்—பாராத காட்சிகள் பலமாகி வருகின்றன.

சென்னையிலே கூடிய விவசாய வேந்தர்கள் பலர், அரண்மனை போன்ற தங்களது பரம்பரை இருப்பிடங்களை விட்டு அஞ்ஞாதவாசம் போகுமளவுக்கு—'இப்போது' இக் காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

இருந்தும், கூறுகிறார்கள் 'இப்போது போலவே' விவசாய முறை நடத்தப்படவேண்டும் என்பதாக.

* * *

நிலப்பிரபுக்களின் தொகை மிகவும் குறைவு. ஆனால், அவர்களிடமிருக்கும் ஆதிக்கமோ மிகவும் அதிகம்.

கிட்டத்தட்ட ஒரு ஜில்லா முழுவதையுமே ஆட்டிவைக்கக் கூடிய

அளவுக்கு ஆள் அம்பும், அதிகார வசதியும் உடையவர்களாக இருக்கிறார்கள். சொந்தச் சொத்து மட்டுமல்ல, கோயில்களுக்கும் இன்னபிற தர்ம ஸ்தாபனங்களுக்குமென விடப்பட்ட பெரும்பாலான நஞ்சை புஞ்சைகளின் தர்மகர்த்தாக்களாகவும் இவர்கள் இருந்துவருகிறார்கள்.

ஆகவே, இவர்களுக்குக் கீழ் குத்தகையாளர்கள் — தலையாரிகள் — காரியஸ்தர்கள் என்று பற்பல படிக்கட்டுகள் இருக்கின்றன. இவர்கள் மூலம் நிலபுலன்களின் வருவாயைப் பெற்றுக்கொண்டு, குஷாலான வாழ்வு நடத்துகிறார்கள். இவர்களில் பல பேருக்குத் தங்களுக்கு எங்கெங்கே வயலிருக்கிறது என்ற விபரங்கூடத் தெரியாது!

இந்நிலையில் எச்சரிக்கை விடுகின்றனர்—உற்பத்திப் பெருக்கம் குறைந்துவிடுமாம்! சிறு மிராசுதார்கள் நிலை சீர்கெட்டுப் போய்விடுமாம்!!

"உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று கூறுவதைக் கேட்டதும், உற்பத்தியல்லவோ குறைந்துவிடும் என்று ஊருக்குப் பாடுபடும் உத்தமர்களாக மாறியிருக்கின்றனர்.

இப்போதுள்ள நிலமான்ய முறையில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.

இத்தகைய அவசரமும் துணிச்சலும் பிறந்ததற்குக் காரணம், குமரப்பா என்பவர் தலைமையில் நிறுவப்பட்ட விவசாயக் கமிட்டியொன்றின் முடிவுகளை யொட்டி நிலச் சீர்திருத்தம் செய்வது குறித்து சர்க்கார் ஒரு சுற்றறிக்கை விடுத்திருப்பது தான்.

ஜே. சி. குமரப்பா—காந்தியாரோடு பழகியவர், காங்கிரஸ் ஏடுகளால் இந்தியாவின் குடிசைத் தொழில் நிபுணர் என்று பாராட்டப்பட்டவர். அவரது தலைமையில் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகச் செய்யவேண்டிய யோசனைகளைக் கூறுமாறு அகில இந்திய காங்கிரஸால் ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டது. நாட்டின் நாலுவிடங்களுக்கும் சென்று அக் கமிட்டியினர் பல விஷயங்கள் குறித்து ஆராய்ந்து கடந்த சில மாதங்களுக்கு முன் தங்களது முடிவுகளை வெளியிட்டிருந்தனர்.

உழுபவன் வசமே நிலமிருக்க வேண்டும்.

நிலப் பிரபுத்வம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

30 ஏக்கருக்கு மேல் எவருக்கும் நிலம் சொந்தமாக இருக்கக் கூடாது

என்பது போன்ற சில முக்கிய அம்சங்கள், அம்முடிவுகளில் கூறப்பட்டிருந்தன.

குமரப்பா கமிட்டியின் முடிவு காலொடிந்த குதிரையைப் போன்றது—நடக்க முடியாதது, நடைபெற முடியாதது என்று இத்தகைய சாதாரண அம்சங்களைக் கண்டதும் பற்பலர் கூறினர்.

முற்போக்கு விரும்பிகளோ — மதில்மேல் பூனை போன்றிருக்கிறது, மறுமலர்ச்சி சமுதாயத்தைக் காட்ட முடியாத முடிவு, கவைக்கு உதவாதது, காய்தானே ஒழிய கனியல்ல என்று தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

பழைய பிரபுத்துவ முறைக்குச் சாவுமணி கட்டாது, சமரச முறையைத் திணிக்கும் அந்த முடிவு—பிடிக்கவில்லையாம், இவர்களுக்கு! அதை எதிர்த்து, அந்த முடிவுகளை யொட்டி ஆளவந்தார் நடவடிக்கைகளை எடுத்தல் தகாது; ஆகாது; அடாது; என்று அபஸ்வர ஆலாபனை நடத்தியிருக்கின்றனர் — விவசாயப் பிரதிநிதிகள் என்ற போர்வையில் மாநாடு கூட்டி.

"உழுபவனே — நிலத்திற்கு உரிமைக்காரன்" என்ற இதய கீதம், இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்குமே முழங்குகிறது. இந்தக் கீதத்தை கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல, சோஷியலிஸ்டுகள் மட்டுமல்ல, காங்கிரசாரே முழக்குபவர்கள்தான்! இன்னும் நேரு போன்றோர் — இது குறித்துப் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அதிக நிலம் படைத்தோர் தொகை மிகச் சொற்பம். கொஞ்சம் நிலமுடையோர் தான் அதிகமாக இருக்கின்றனர்,

ஆகவே உழுபவர்களுக்கே நிலம் என்பதால் அதிகம் பேருக்கு துயரம் தீர்ந்துவிட முடியாது

எனவே இப்போதுபோலவே இருக்கட்டும்—வேண்டாம் சீர்திருத்தம்!

இதுதான், 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்பது கூடாது என்று எதிர்ப்பவர்கள் காட்டும் காரணம்.

நிலப்பிரபுக்கள் சிலரே ஒழிய அதுபோல அவர்கள் ஆதிக்கமும் இருக்கிறது என்று எண்ண முடியாது.

நிலப் பிரபுக்கள்
அசையாத பிரபுக்கள்

இரண்டு பேரிடமும் சிக்கிக் கிடக்கும் நஞ்சையும் புஞ்சையும் ஏராளம்! பெரும் பண்ணைகளும், கோயில் பண்ணைகளும் எவ்வளவு தூரம் மக்கள்மீது அதிகாரங்களைச் செலுத்துகின்றன என்பது, புரியாத புதிரல்ல; தெரியாத விஷயமுமல்ல.

ஒரு விவசாயியையோ அல்லது கூலியாளையோ அமர்த்திக்கொண்டு அவர்களுடனே வயலில் இறங்கி வேலை செய்யும் சிறு குத்தகைதாரர்கள்; சிறு மிராசுதார்கள் ஆகியோரது தொகைதான் மிக அதிகம்.

அவர்களுக்கு நன்மை தேடித்தர வேண்டும் என்பதுதான் உழைப்போருக்கே உரிமை என்ற கீதத்தின் பொருள்.

ஆனால், இது கூடாது என்கின்றனர் — ஆதிக்கக்காரர்கள், அதுவும் நிலமான்ய முறையே கெட்டுச் சிக்கலாகிவிடும் என்று கூறியவண்ணம்!

இவர்களுக்கு உண்மையில் உழைத்து அலுப்போர் வாழ்வு குறித்து எவ்வளவு கவலையிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

கேள்வி:- விவசாயப் பாட்டாளிகளுக்கு குடியிருக்கவும் இடமில்லையல்லவா?

பதில்:- ஆமாம்! நாங்கள் தரும் மனைக்கட்டுகளில் தானிருக்கிறார்கள்.

கேள்வி:- உங்களுக்கு அவர்களைப் பிடிக்கவில்லையென்றால்...

பதில்:- காலி செய்துவிட்டுப் போகச் சொல்வோம். புதிதாக அமர்த்துபவனை குடிவைப்போம்.

கேள்வி:- பல ஆண்டுகள் இருந்தவனை 'போடா' என்றால் அவன் நடுத்தெருவில்தானே நிற்கவேண்டும்!

நேரடியான பதில் கூறவில்லை—

"சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் சர்க்காரே ஜாகை வசதி செய்து தருகிறது. உத்தியோக

(5-ம் பக்கம் பார்க்க,

# வீம்புபேசும் விவசாய 'வேந்தர்கள்'!

[ அரங்கண்ணல் ]

'குப்பா, கோவிந்தா' என்று ஆட்களை எழுப்பத் தங்களது எடுபிடிகள் போடும் கூச்சலைக்கூட அவர்கள் கேட்டிருக்க மாட்டார்கள்! இளைத்த மாடுகளைப் பூட்டியதால், அவை ஏரை இழுக்க முடியாமல் தத்தளிக்க, தனது உரத்த குரலால் அதை மிரட்டி ஓட்ட உழுபவன் எழுப்பும் சப்தம் அவர்கள் காதை ஒருநாள்கூட எட்டியிருக்காது!

காலைக் குளிர் கைகால்களை நடுக்க, அதைத் தடுக்க ஒருமுழம் துணியில்லாததால் உடல் துடிக்க 'ஏர் கட்டியாகணுமே' என்ற கடமையுணர்ச்சி இழுக்க, காலை மலருமுன் கழனியே கதியென — கவலை நிரம்பிய முகம், பசிநிறைந்த வயிறு, பயம் பரவிய பார்வை ஆகியவைகளோடு தள்ளாடிச் செல்பவர்களை அவர்கள் கண்டிருக்க முடியாது!

ஆனால், 'பார்முழுதும் ஏர்முனையிலே' பாடிக் காட்டத் தயங்க மாட்டார்கள் — 'பாரும் ஏரும்' என்பது குறித்துக் கனத்த மாலையைக் கழுத்தில் போட்டதும் கன ஜோராகப் பிரசங்கம் செய்வார்கள்!

* X *

இத்தகைய 'பெரும் பண்ணை'கள் நமது நாட்டிலே இருக்கின்றன— பெருவாரியான அளவில் அல்ல; குறைந்த எண்ணிக்கையில்.

ஆனால், இவர்கள் வசம் சிக்கிக் கிடக்கும் நஞ்சை புஞ்சையும், ஆட்களும், எடுபிடிகளும் ஏராளம்.

உதய நேரத்தை ஒரு நாள் கூடப் பார்த்திராத இப்பண்ணையாளர்கள் வசம்தான்—நாட்டில், கோவில்களுக்கென இருக்கும் ஏராளமான நிலபுலன்களும் இருக்கின்றன. இத்தகைய வாய்ப்பும் வசதியும் படைத்தோர் — நமது நாட்டின் விவசாய வேந்தர்களாகும். வியர்வை சிறிதுகூடச் சிந்தாது, விருந்துக்கும் விழாவுக்கும், கோடை வாசத்துக்கும் குளிர் நிலாப் பயணத்துக்கும் என உல்லாசத்தோடு பொழுதுபோக்குபவர்கள்.

இத்தகைய விவசாய வேந்தர்களிலே சிலர் அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிலச்சுவான்தார்கள் மாநாட்டில் சிற்சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

கனவான்களா கருத்துக்கள் வெளியிட்டிருக்கின்றனர் என்று கேட்கத் தோன்றும். ஆமாம், கருத்துக்கள் தான்; ஆனால் அத்தனையும் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற மிரட்டல் கணைகள்!

> விவசாய வருமானத்தின் மீது வரி விதிக்கக் கூடாது.
>
> ஒருவர் இவ்வளவு நிலம் தான் வைத்திருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பது கூடாது.

இவைதான் அவர்கள் சிந்திய கருத்துரைகளின் முக்கிய அம்சங்களாகும்.

ஏராளமான நிலம் வைத்திருப்பவருக்குக் கிடைக்கும் பெருமித லாபத்துக்கு வரி கூடாது — எப்போதும்போல நிலப் பிரபுத்துவம் நீடிக்கவேண்டும் என்ற தங்கள் ஆசைகளைத் துணிவோடு வெளியிட்டிருக்கிறார்கள்!

இதற்கு அவர்கள் காட்டியிருக்கும் காரணம்,

> இவை புரட்சிகரமானவை. இதனால் உற்பத்தி தடையாகும்.
>
> அதிக நிலம் உள்ளவர்கள் சிலர்தான்—ஆதலால் இதனால் எதிர்பார்க்கும் பலனேற்படாது.

பிரசங்கம் செய்தது மட்டுமல்ல, மேற்படி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களும் இதே கருத்தைக் கூறுபவைதான். கூர்ந்து நோக்கினால் இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகக் கூடிய மாநாடுதானோ இது என்றுகூட எண்ணத் தோன்றும்.

இப்பொழுதுள்ளபடியே எல்லாம் நடைபெற வேண்டும் — இதில் தலையிட்டு நிலச் சீர்திருத்தம் செய்யப் புகுவது—ஆபத்து, ஆகாத காரியம் என்று எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

இப்போழுதுள்ளபடியே! — எப்போதும் இருக்க வேண்டுமாம்!

"டே! கழுதை, என்னடா உறுமுறே! உடம்பு ஏதாவது கேட்குதோ?"

"இல்லீங்க—ஏஜமானைப் பார்க்கணும்னு வந்தேனுங்க!"

"யாரை—என்னையா?"

"உங்களை இல்லீங்க! நம்ப ஏஜமானைத்தான்!"

"ராஸகல்! நம்ப ஏஜமான்-ஆளைப் பாரு! நீயும் நானும் ஒண்ணுடா—'நம்ப' போடுறீயா, நம்ப!"

"பின்னே என்னாங்க சொல்றது?"

"என்ன திமிர்! எதிர்த்துப் பேச ஆரம்பிச்சுட்டேயா? ஏது காரியம் கெட்டுப் பேச்சு போலேயிருக்கே—ஊம்....!"

பண்ணையாரைப் பார்க்க வந்தான் பரமன் — ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்தவன். அவனுக்கும் பண்ணையாரின் காரியஸ்தருக்கும் மேலே கண்டபடி பேச்சு நடக்கிறது. 'நம்ப'என்று சொல்லியதனால் ஆத்திரம்! காரியஸ்தன் கை பரமனைப் பதம் பார்க்கிறது!

X X X

"ஐயா, இருக்காருங்களா?"

"ஏன், என்ன வேணும்!"

"கொஞ்சம் சாகுபடிக்கு நிலம் வேணும்!"

"எப்படிக் குத்தகை தருவே?"

"ஊரிலே உலகத்திலே எப்படியோ அப்படிப் போட்டுருங்க!"

"சரி! அதுபோலவே செய்வோம். ஆனா, விதையிலே—மாடு இல்லே—தரிசுக் கூலிக்கு நெல் இல்லே, அது இல்லே இது இல்லேன்னு இங்கே அடியெடுத்து வைக்கக் கூடாது!"

"அப்படிச் சொல்லீட்டா ஏழை என்னங்க செய்வேன்— என்கிட்டே ஏதுங்க விதையும் நெல்லும்! நீங்கதான் பார்த்துத் தரணும்—என்னை நம்புங்க! மாசூலில், என்ன கொடுத்தீங்களோ அதை எடுத்துக்கலாம்"

"சரி, ஐயாவைக் கேட்கிறேன்—ஆனா ஒரு விஷயம்! இப்ப, நீ வாங்கிக்கொண்டு போகிற விதை—

தரிசு கூலி இதுக்கெல்லாம் என்ன வட்டி போட்டுத் தருவே?"

"வட்டிங்களா?"

"ஆமாம்! கலத்துக்கு ஆறு மரக்கால் சேர்த்துப் போட்டு அளக்கணும் — தெரியுதா. கவனத்திலே வைச்சுக்கோ"

முருகன் — விவசாயி; ஆனால் நிலம் இல்லாதவன். இப்படிக் குத்தகைக்கு நிலம் வாங்கி அதை உழுது பயிரிட்டு 'ஏதாவது' கிடைக்குமா என்று கஷ்டப்படுவது தான் அவனது தொழில். ஆகவே பெரிய பண்ணைக்கு வருகிறான் — சாகுபடிக்கு நிலம் கேட்க. அங்கே, இது!

X X X

"குப்புச் செட்டி எப்படியிருக்கிறார்டா!"

"யாருங்க பக்கத்தூர் மிராசுதாருங்களா!"

"ஆமாம். அவனைத்தான் கேட்கிறேன். எப்படியிருக்கிறான்?"

"எப்போதும் போலத்தாங்க!"

"இன்னும் திமிர் போகலியா—"

"இல்லீங்க-இரண்டு நாள் முன்பு கூட நம்ம மாடுகளைப் பிடிச்சுக்கட்டி வைத்திருந்தானுங்க!"

"அப்படியா—போய்க் கேட்டதுக்கு என்ன சொன்னான்?"

"போய்யா—பெரிய பண்ணைன்னு அவுங்க வீட்டிலே! எனக்கு எஜமான்யமா அளக்குறாரு.

நானுந்தான் பொறுத்துப் பொறுத்துப் போறேன். ஓட ஓட விரட்டுறீங்களே—இப்படி மாடுகளை பயிர் மேலே மேயவிட்டா என்னய்யா செய்றது! என் வயிறு எரியாதா!— அப்படின்னு, என்னென்னமோ பேசுறாங்க."

"வயிறு எரியுதாமா —அவ்வளவு துணிச்சல் வந்திருக்கு. எல்லாம் பக்கத்தூர் பண்ணை கொடுக்கிற தைரியம். அவனையும் இவனையும் பார்க்கிறேன் ஒரு கை!"

"நான் கூடச் சொன்னேனுங்க— அநாவசியமா ஏனய்யா, எங்ககிட்டே மோதுறே. வீணு, கெட்டு அலையாதே! ஐயா காதுக்கு விழுந்தா ஆபத்தாப் போயிடும்—அப்படீன்னு கூடச் சொன்னேனுங்க.

அவன் கொஞ்சங்கூடப் பயப்படலே. 'உங்க அய்யாவுமாச்சு, நீயுமாச்சு! 'என் நிலத்தை யெல்லாம் விற்றுவது பார்க்கிறேண்டா ஒருகை' என்று கத்துறாங்க!"

பக்கத்தூர் குப்புச்செட்டி சிறு மிராசுதார். தனக்கென இரண்டு மூன்று ஆட்களையுடையவர். அவருடைய வயலில்-பண்ணைமாடுமேயவே, பிடித்துக் கட்டினார். அதைக்கேட்ட பண்ணையாருக்குப் பதட்டம்வந்தது.

X X X

"எங்கே, தலையாரி? கூப்பிடு!"

"எஜமான் கூப்பிட்டீங்களா?"

"எத்தனை தடவைடா, கத்தறது— காது கேட்காமெ அடைச்சுப் போச்சோ — கழுதை! ஏன்டா தண்ணி வரலே, வாய்க்காலிலே!"

"பக்கத்தூர் பெரியபண்ணை தண்ணியைத் தடுத்துப் போட்டிருக்காங்க..........."

"என்னது?"

"ஆமாங்க! வாய்க்கால் நடுவே பெரிய அணையாட்டம் போட்டுத் தண்ணியைத்திருப்பி அவுங்கவாய்க்காலுக்கு வச்சிருக்காங்க. கேட்டா, கண்ணுபின்னுன்னு பேசுறாங்க. கையைத் தூக்கிக்கிட்டு அடிக்க வர்றான், பண்ணைத்தலையாரி. பார்க்கச் சொல்லுடா ஒருகைன்னு துள்ளிக் குதிக்கிறாங்க, கம்பும் அரிவாளும் வைச்சுகிட்டு!"

"அப்படியா! சரி போய்க் குப்புச் செட்டியை வரச்சொல்லு — அப்படியே நமக்கு வேண்டியவங்ககிட்டேயும் நான் வரச்சொன்னதாச்சொல்லு! இன்னைக்கும்போய் இரண்டிலே ஒண்ணு பார்த்துடுவோம்!"

பக்கத்தூர் சின்னப்பண்ணைக்கும் —தண்ணீர் பாய்ச்சும்தலையாரிக்கும் இதுபோலப்பேச்சுநடக்கிறது. வேண்டியவர்களோடு ஆலோசிக்கிறார். ஆட்கள் திரட்டப்படுகின்றனர். தண்ணீருக்காகச் சண்டை நடக்கிறது. சின்னப் பண்ணை—பெரிய பண்ணை தகராறு காரணமாகப் பயிர்வெட்டும் குத்தும் வாங்குகிறார்கள்!

X X X

இப்பொழுது நடப்பது — இது! இது—தொடர்ந்து இருக்கவேண்டுமாம்.

பெரிய பண்ணை

சின்னப் பண்ணை

சிறு மிராசுதார்

குத்தகையாளர்

விவசாயி.

இந்த முறை எப்போதும் இருக்கவேண்டுமாம் — இதில் சிறிதுகூட மாற்றம் ஏற்படக்கூடாதாம்! பேசியிருக்கின்றனர் — தீர்மானங்களாக நிறைவேற்றியிருக்கின்றனர் — பின்னர் அவைகளை ஆளவந்தாருக்குச் சொல்லி எப்படி அமுல் நடத்தச் செய்யலாம் என்பது குறித்தும் ஆலோசித்திருக்கின்றனர். ஆலோசித்த இடம் — "சாதாரணது"கள் எட்டிப்பார்க்கவும் முடியாத இடம். கனவான்களின் 'காஸ்மாபாலிட்டன் கிளப்!' அங்கு, மேற்படி நிலச்சுவான்தார்கள் மாநாடு நடந்த மறுதினம் எப்போதும்போல விவசாயம் நடக்கவேண்டும்' என்பது குறித்து, என்னென்ன வகையில் சர்க்காருக்குப் பதில்கள் அனுப்பலாம் என்று ஆலோசித்தனராம்!

வீடு தீப்பற்றி எரியும்போது வீணையின்கானம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது தெரியுமா — என்றுகேட்ட நீரோ மன்னனின் கதை எல்லோருக்கும் தெரியும். அந்த நீரோவையும் மிஞ்சுகிறார்கள் இந்த நிலப்பிரபுக்கள்!

இப்போதுள்ளபோலவே நடக்கவேண்டுமாம்— கூறியிருக்கின்றனர். 'சரி, இப்போதுள்ளது போலவே நடக்கட்டும்' என்று, இவர்கள் கூற்றுக்குப் பணிந்துவிடவேண்டும் அரசாங்கம் என்று எச்சரிக்கை விடுகின்றனர்.

ஆனால், இந்த எச்சரிக்கை, விட்டபோது 'இப்போது நடைபெறுவது' —சம்பந்தமாக இவர்களின் மனது

(8-ம் பக்கம் பார்க்க)

வாசித்தீர்களா?

திராவிட முன்னேற்ற

வார இதழ்

சங்குநாதம்

ஆசிரியர்:- பேரி. சுவாமிநாதன்.

தனிப் பிரதி 0—1—6.

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

சங்குநாதம் ஆபீஸ்,

AD. [illegible]. (R. D.)

## "கைதி"

7-ம் பக்கத் தொடர்ச்சி

ணனைப் பற்றி அறியாமலே, குடும்பச் சூழலில் சிக்கிக் கிடந்த முல்லைக்கு அழகப்பன் என்ற புதல்வன் பிறந்து வாலிபவயதை அடைந்து விடுகிறான்.

இடையில், தப்பியோடிய 'கைதி' வீரப்பனைக் குறித்து அரசாங்கம் தனது கழுகுப் பார்வையைச் செலுத்தி வருகிறது. 'நாட்டில் ஏழ்மையின் காரணமாக நடைபெறும் கொள்ளை கொலைகளுக்கெல்லாம் தப்பியோடிய கைதிதான் காரணமென்று எண்ணி, வீரப்பனைப் பிடிப்பதில், வீராவேசத்தோடு முயன்று வருகிறார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

வயோதிகப் பருவம் அடைந்துவிட்ட வீரப்பன் நகரமேயராக இருந்து பணியாற்றி வரும்போது—'வீரப்பனைப் பிடித்துவிட்டதாகத் தகவல் வருகிறது. வழியில் சென்ற ஏழை ஒருவனை வீரப்பன் என்று பிடித்துவந்து வழக்கு நடத்துகிறது அரசாங்கம்! விபரம் அறிந்த நல்ல நாயகம் துடித்து ஓடுகிறார்—ஏழையைக் காப்பாற்றும் நோக்குடன், தானே வீரப்பன் என்பதை விளக்குகிறார்.

ஏமாந்து நின்ற அதிகாரம், வலுவில் சிக்கிய 'பசு'வை, சட்டம் என்ற கோலைக் கொண்டு, சிறைக்குள் தள்ளுகிறது!

சர்க்காருக்கு ஊழியர் என்ற முறையிலே தனது கடமையைச் செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மனப் புயலுக்கு இரையாகிறார்-வீரப்பன் தங்கை, இன்ஸ்பெக்டரின் மனைவி முல்லைக்கும் வாழ்வு முடிகிறது. சோகத்தின் பிம்பமாகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் அலறுகிறார்! சிறையிலே, உலகத்தைப் பார்த்துச் சிரித்தவண்ணம் வீரப்பன் நிற்கிறான்!!

X X X

சிந்தனையைத் தூண்டும் வகையில் தோழர் வேலன் கதையை அமைத்துள்ளார். ஏழையுலகின் படப்பிடிப்பாக இருக்கும் இக்கதைக்கு உயிரூட்டும் நடிக நண்பர்கள் யாவரும்—தமிழகத்திற்கு அறிமுகமான சீர்திருத்த மணிகள். ஆகவே, "கைதி"யைக் கண்டோர் 'அருமையான நாடகம்' என்ற முடிவுடனேயே திரும்புவர்.

'பிரமாதம்' என்று கூறினர் ஒருவர். 'கைதி வேடம் போட்டவர் நடிக்கவில்லையடா-அவர்தான் அந்தக் கதையில் வரும் கைதியோ என்று கூறும்படி இயற்கையாய் இருந்தது" என்றார் இன்னொருவர். கைதிவீரப்பன் வேடம் தாங்கி ஏழ்மையுலகின் சோக நிகழ்ச்சிகளைத் தன் நடிப்பின் மூலம் தோழர் எஸ். எஸ். இராஜேந்திரன் காட்டியபொழுது, கல்லுக்கும் கண்ணீர் வரவே செய்யும். இராஜேந்திரனின் நடிப்பை எண்ணினாலே நமக்கு அவரது எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அதிகமாகிறது. பொறுப்பு மிகுந்த போலீஸ் இன்ஸ்பெக்டராக வந்த நடிகமணி டி. வி. நாராயணசாமி, தான் எத்தகைய வேடத்துக்கும் தகுதியானவர் என்பதை நிரூபித்தார். மிடுக்கான பேச்சும், நீண்ட நேரம் விளக்கவேண்டியவைகளை நொடிப்பொழுதில் மாறும் தனது முகப்பாவ மூலமும், இயற்கை உணர்ச்சியோடு நடித்து எல்லோர் இதயங்களையும் கவர்ந்தார்.

முல்லையாக நடித்த தோழியரின் நடிப்பில் துடிப்பு இருந்ததோடு, ஒரு நல்ல நடிகை என்பதற்கான சிறப்புகளும் அவரது நடிப்பில் தென்பட்டன. அவரும் அவரது சகோதரியும் ஆடிய நடனக்காட்சிகளும் பாராட்டற்குரியன.

சீர்திருத்த உலகுக்கு அறிமுகமான தோழர்கள் எம். என் கிருஷ்ணன், ஏ. எம். மருதப்பா, பி. எஸ். வெங்கடாசலம், பி. ஆர். இலட்சுமிபதி, என். எம். முத்து, கார்கோல் ராஜ், பி. ஏ. சொக்கலிங்கம் முதலானோர், எல்லோரது கவனத்தையும் கவர்ந்து விட்டார்கள். கிருஷ்ணனின் கிண்டல் கலந்த இயற்கை நடிப்பும், மருதப்பாவின் அனுபவம் செறிந்த புரோகித வேடமும், வெங்கடாசலத்தின் தமிழ் மணக்கும் சொல்வீச்சும், இலட்சுமிபதியின் 'ஓட்டல் காரி' உருவமும், முத்துவின் நகைச்சுவையும், கார்க்கோல் ராஜின் கதாகாலேட்சமும், சொக்கலிங்கத்தின் வீரப் பேச்சும் நிரம்பிய 'கைதி' கண்டோரின் கருத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

X X X

உருவான நாடகக் கம்பெனிகள் உருமாறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாடகக் கலையின்பாலும் சீர்திருத்தப் பிரச்சாரத்திலும் கொண்ட ஆர்வத்தின் காரணமாக நடிக நண்பர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து, பணியாற்றி மக்களிடம் சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றுவிட்டனர். இதற்குக் காரணமாயிருந்த நண்பர் ஏ. கே. வேலனைப் பாராட்டுவதுடன், 'கைதி' நாடெங்கும் நடிக்கப்பட வேண்டும் என்ற நமது ஆசையையும் கரந்தை நாடகப் பண்ணையாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# கழகத் தோழர்களுக்கு

புதிய முறையில், பெரிய அளவில் தினசரி இதழ் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதுவரையில் இயக்கச் செய்திகள், கூட்ட நிகழ்ச்சிகள் ஆகியவைகளுக்காகச் சில பக்கங்கள் நமது இதழில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கழக சம்பந்தமான நடவடிக்கைகளைச் சுருக்கமான அளவில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்
"திராவிடநாடு"
காஞ்சிபுரம்

# யுத்தம்

## ஒரு தொடர்கதை!

கலிங்கம் என்னைக் கலங்கச்செய்து விட்டது—கண்ணீர் சொரிகிறேன்—சொரிந்து கொண்டே இருக்கிறேன் — மணிக்கணக்காய் — நாட்கணக்கில்! அதோ—அவர்கள் கண்களில் பொங்கி வழிகிறது நீர்—செந்நீர் — கொதிக்கும் குருதிமழை—ஆம் அவர்கள் கரங்களிலே விலங்குகள், கால்களில் இரும்புச் சங்கிலிகளின் பிணைப்பு—உடலில் வெட்டுக் காயங்கள், ஆறாத இரணங்கள்-உள்ளத்தில் மாறாதவடு — இவைகளைத் தாங்கி நடக்கிறார்கள் — ஒருவரா, இருவரா, இலட்சத்து ஐம்பதினாயிரம் வீரர்கள் — உலக சமூகத்துத் துடிப்புள்ள அணுக்களின் சோக மூச்சு என் செவி புகுந்து என் சிந்தையைக் குடைகிறது!

பிண மலைகள்—ஈட்டி, வாள்களுக்கிடையிடையே சாகத் துடிக்கும் மனித உடல்களின் பரிதாபப் படபடப்பு — அப்பப்பா, கோரம், கோரம்! ஆயிரம், ஆயிரமாக மடிகின்றனர், மரணத்தோடு மல்லாடுகின்றனர்.

கழுகுகளின் கூட்டம், நரிகளின் ஊளைச் சத்தம், பிண நாற்றம், குருதிக்கறை, குறைபட்ட உடல்கள்—கண்போய், காதிழந்து, காலொடிந்து, கரம்நீங்கி......ஐயோ, காணச் சகிக்காத காட்சிகள், நிகழ்ச்சிகள் இனி மகதத்தில் மட்டுமல்ல, இந்த மாநிலத்திலேயே இருக்கக் கூடாது—இருக்க விடக்கூடாது!

போர், போர்—கூடாது—குவலயத்தோர் குறித்துக்கொள்ள வேண்டும் இந்தக் கோட்பாட்டை! மனதிலிருத்திக் கொள்ளவேண்டும் இந்த இலட்சியச் சொற்றொடரை!

முரசு கொட்டட்டும் — இனி! ஆனால், போருக்காக அல்ல—அமைதியால் ஆனந்தமடைய! சமாதானத்தால் சாந்திபெற! சங்கு முழங்கட்டும். சாந்தம் வளரட்டும்.

யுத்தம்—அது அநாகரீகப் பேயின் சத்தம்! இனி என் செவியில் படக்கூடாது அந்தச் சத்தற்ற சாரமற்ற சொல் — எவருக்குமே கூடாது அந்தப் பித்தம்!

போரை ஒழித்துக்கட்ட இன்று கங்கணம் கட்டிவிட்டேன். கலிங்கம் தந்த கட்டளை இது—அங்கே நான் பார்த்த காலனின் கூத்துத் தந்த போதனை இது............

மனதிற்குள்ளே பேசிக்கொண்டான், மகதநாட்டு மன்னன், உலகப் பேரரசர்களில் ஒருவன் எனவரலாறு வாழ்த்திடும் பெருமைக்குரியவன், அசோகன். அன்று முதல் அவன் ஆட்சியிலே அதற்காகக் காரியங்கள் நடந்தன.

திக்கெட்டும் அவனுடைய சமாதானத் தூதுவர்கள் சென்றனர். போருக்கு எதிரிகளாகத் திரிந்தனர். அமைதி வாழ்விற்கு ஆதரவுதிரட்டினர். சமாதான நிலைமைக்குத் தக்க விதைகளைத் தூவினர். அமைதி முளைத்தது. அன்பு வளர்ந்தது. கொடுமைகள் களைந்தெடுக்கப்பட்டன. அறநெறி செழித்தது. சுகம் கிடைத்தது.

X X X

போர் கூடாது என்றொரு மன்னனின் பொன்னான திட்டம்—அதனை அவன் பொறித்துக்காட்டிய ஸ்தூபி இன்று இந்நாட்டு ஆட்சிக் கொடியினிடையில! — இருக்கிறது, பார்க்கிறோம்! எனினும் போருக்குச் சரிவு தேடும் போக்கிலே நாம் இல்லை—இருக்கிறோமா என்று எண்ணிப் பார்க்கவும் நேரமில்லை.

சென்ற போரில் உலக சமூகம் சருக்கி அடித்துக்கொண்டு விழுந்தது. அதனின்றும் இன்னமும் எழுந்து நிற்கமுடியவில்லை. 'கட்டுமரம் கட்டிகிட்டு, கடல் மேலே போனானே கடவுளே, காணாமல் போனானே கடவுளே, இன்னமும் திரும்பவில்லை கடவுளே' என்று போனயுத்தத்தில் பொசுங்கிப்போன சுபீட்சத்தைக் காணவில்லை—திரும்பவும்; ஒடிஒளிந்த சுகம் இன்னும் தன் ஒளி முகங்காட்டி வெளியில் வரவில்லை சரியாக! அதற்குள் போர்—மீண்டும் யுத்தம் என்று நம்செவிகளில் படும்பொழுது நம்நெஞ்சு நிலைகுலைகிறது.

நொறுங்கிக் கொண்டிருக்கும் கொரியாவில், ஆதிக்க வெறியேறிநிற்கும் அமெரிக்கா ஆர்ப்பாட்டம் செய்கிறது. முதலாளித்துவத்தை எதிர்த்தொழித்து விட்ட ரோஷக்கார ரஷ்யாவும் போரிடுகிறது.

தினம், தினம் — புதுப் புதுப் போர்ச் செய்திகள் வந்து குவிகின்றன.

நாட்டு நலத்தில் நாட்டமுள்ள நல்லவர்கள் நடுங்குகிறார்கள் செய்திகளைப் படித்துவிட்டு—காற்றடிக்கும் பொழுதே தூற்றிக்கொள்ளடா என்ற போக்கினர் பொறியைத் தீயாக்கவும், தீயை ஜுவாலையுடன் எரியச் செய்யவும் துடிக்கின்றனர்.

கொரியா 'போலந்து' ஆகிவிடுமோ என்று கேட்கிறது உலகம்—இல்லை என்பாரும் உளர். அப்படி ஆகும்படி விடக்கூடாது என்று பேசுவோரும் இல்லாமல் போகவில்லை. எனினும் யுத்த பீதி ஆரம்பமாகி விட்டது. போர் என்ற பரபரப்புணர்ச்சி பரவிடத் தொடங்கிவிட்டது.

இந்தியா—போர் நிறுத்த வேலையில் ஈடுபடுமாம்.

பண்டிதநேரு அனுப்பியிருக்கிறார் இரண்டு கடிதங்கள்—விடை கிடைக்கட்டும். அதன் விளைவைக்கூடப் பிறகு பார்ப்போம். அந்த இரண்டு கடிதங்கள் போரை நிறுத்தப் புறப்பட்டுப் போயிருக்கின்றன.

ஆம், யுத்தம்—ஒரு பயங்கரத் தொடர்கதை!

மூன்றாம் உலக யுத்தம் தலைநீட்டி விட்டது. இன்று எடுகளைப் புரட்டுவோம்—பழைய போர்க்கதையைப் படித்தால் உடனே கூவுவோம், போர் கூடாது, யுத்தம் வேண்டாம் என்று.

யுத்தம் உலகத்தின் இயற்கை விதி என்று வாதிட்டோர், வாதிடுவோர் உண்டு—போரிடு, புகழடைவாய். கருணையென்று சொல்லிப் பேடியாகாதே. அமைதி என்று பேசி அடிமுட்டாள் என்று பட்டம் பெறாதே. செத்த அமைதி சிரழிவைத்தான் தரும் என்று உபதேசம் புரிந்தவருமுண்டு.

அமைதி என்று அடித்துக்கொள்கிறாய். அது கிட்டாப் பொருளடா, கேள்—சண்டையிடு — சமாதானம் அடை என்று தூபமிடுவோர் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒரு நல்ல பாடம்—யுத்தத்தின் பயங்கரத் தொடர்ச் சித்திரம். அவர்கள் அதனைப் புரிந்துகொண்டால் பிறகு யுத்தம் என்ற சத்தங் கேட்டாலே, அடங்கி விடுவர்.

X X X

ஒவ்வொரு நாட்டு வரலாற்று ஏட்டையும் பிரியுங்கள். படியுங்கள். யுத்தத் தொகுப்புக் குறிப்பொன்று எழுதிவிடலாம். அவைகள் என் ஏர்பட்டன என்ற காரணப் பட்டியலையும் தயார் செய்துவிடலாம்.

அரசு செலுத்த, நாடேற்படுத்த யுத்தம் தேவை என்றார்கள் — வளர்ந்த அரசுகளிலே உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படும்—ஏற்பட்டுத்தான் தீரும். இங்கிலாந்து தேசத்து நார்மன் படையெடுப்பு, டேனர் நுழைவு என்று சாட்சிகள் தேடினர். ரோஜாப்பூப் போர், குடியானவர் கலகம், குருதியற்ற புரட்சி என்று பல நிகழ்ச்சிகளை இழுத்து வந்து நிறுத்தினர். மதத்தை நிலைநாட்ட மக்கள் மார்தட்டி, தோள் தட்டி, தொடைதட்டிக் கிளம்பியிருக்கின்றனர் போருக்கு—ஐரோப்பிய வரலாற்றுச் சிலுவைப் போர்களைத் தொகுத்தாலே போதும் என்றனர். உரிமைக்காக, அந்நிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்த வீரச் சம்பவங்கள் ஏராளம் உண்டு வரலாற்றில். பிரஞ்சுப் புரட்சியை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். அலெக்சாந்தரை எதிர்த்த போரஸ், அக்பரோடு பொருத பிரதாப் சிங், ஔரங்கசீபைச் சிதறடித்த சிவாஜி—நினைத்துப் பாருங்கள் ஒரு கணம்—அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் மறக்கக்கூடிய சம்பவமா? தனித்தவர்களின் வீரத்தையும், வெற்றியையும் உலகறியச் செய்யக் கூடப் போரிட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. அலக்சாந்தரை அணுகுங்கள். செங்கிஸ்கானை நெருங்குங்கள். ஹானிபாலை மறக்காதீர்கள். நெப்போலியனை நினைவு கூருங்கள். இட்லரைத் தள்ளிவிடாதீர்கள்.

வணிக உரிமைகளைப் பெறப் போரிட்டதாக ஆயிரம் உண்மைகள் காட்டலாம், இந்திய வரலாற்றின் பிற்பகுதியில்! போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரஞ்சு மக்கள், ஆங்கிலேயர் ஆகியோர் போட்ட போட்டா போட்டிச் சண்டைகள் எத்தனையோ...... எண்ணி முடியக் கூடியதல்ல!

இப்படி யுத்தம் ஏற்பட அடுக்கடுக்கான காரணங்களைக் காட்டி நிற்பர், போர் வெறியர்கள். பழங்கால நிகழ்ச்சிகளைக் கோவைப் படுத்திப் பார்த்தால் போர் வேண்டும் என்ற முடிவிற்கு நேர்மையாளர், நீதி வேண்டுவோர் வர முடியாது.

யுத்தம்—பயங்கரமான பதம்! அகராதியே நடுங்கிடும் சொல் அது! அதற்கு இப்படிக் காரணங்கள் காட்டுகின்றனர்.

* * *

யுத்தம் செய்தே தான் நாடு பிடிக்க வேண்டுமா? இல்லாவிட்டால் முடியாதா? திராவிடரை ஆரியர் விரட்டினர். ஆரியரை அடுத்து அடுக்கடுக்காகப் படைவீரர்களின் பரம்பரை வந்தபடியே இருந்தன. பாக்டிரியர், சாக்கியர், ஹூணர், அராபியர், மங்கோலியர், போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்று புற்றீசல்கள் போல வந்து வந்து நம் வாழ்வினை அழித்தனர். அவர்கள் ஆட்சியைப் பிடித்தனர்.

வந்தவர் வஞ்சகர், வாழ்வினில் செழித்தனர். வாழ்ந்தவர், நல்லவர், அழிந்தே போயினர்.

போருக்கான காரணங்களைக் கூறும் பொழுது சில சமயங்களில் சிரிப்பும் வரும் — சீற்றமும் ஏற்படும். ஏன்? சூதாட்டத்தினால் நாடுகளைத் தோற்பதாம் — பிறகு அவைகளை மீட்கப் போராட்டமாம்! நமது இதிகாசம்—பாரதம் பேசுகிறது—வெட்கக்கேடு! இழந்த மனைவியைத் திரும்பப் பெற யுத்தம்—இதற்கு படைவரிசைகள், வாள், ஈட்டி, கேடயமோதல்கள்! இராவண இராமப் போர் — இதிகாச இரத்தினம், காருத்தன்—காவியம்! இராமாயணத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பெண்ணை மீட்க, மண்ணைப் பெருக்க, பொன்னைக் குவிக்க இந்தப் பூவுலகில் பொல்லாத போர்கள் நடந்திருக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்லாத காரணங்களில்லை. அவர்களின் விசித்திர விளக்கங்கள் புளுகின் எல்லைக் கோட்டைத் தாண்டி விட்டன.

சூதாடவும், சோரம் போனவளைத் தேடவும் யுத்தம் என்று படிக்கிறோம் — இதிகாசங்களில்! இழந்த காதுக்காகப் போர் நடந்திருக்கிறது சரித்திரகாலத்தில் ஜெங்கின்ஸ் காதுப் போர் என்றே பெயர். இங்கிலாந்து வரலாற்றிலே இப்படியொரு சண்டை நடந்திருக்கிறது.

எனினும், நாட்டை ஏற்படுத்த' காக்க போர் வேண்டும் என்கிறார்கள் யுத்தப் பித்தம் பிடித்தவர்கள்.

இங்கிலாந்தில் கென்ட், நார்த்தம்பிரியா, கிழக்கு ஆங்கிலியா, மெர்ஸியா, வெஸ்ஸக்ஸ் ஸஸ்ஸக்ஸ் என்ற நாடுகள் ஏற்படுவதற்குள்ளும், அதற்குள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு முதன்மை நிலைமையை அடைவதற்குள்ளும் எவ்வளவு போர்...இரத்த வெள்ளம்........பொடிப்பொடியான கோட்டைகள், கொத்தளங்கள்! அப்பப்பா, அழிவு, அழிவு, பயங்கர அழிவு! 'அழிவுத்தாயின்' பேய்க் கூத்து நடந்துவிட்டது.

நாடுகள் ஏற்படுத்தப், போரின்றி இயலாது என்று காட்ட இந்த நிகழ்ச்சியைக் காட்டுவர்.

X X X

மன்னனோ பித்தன் — மகாராணியோ கர்வி! ஊர்ப்பெருமக்களுக்கோ பதவிப் பித்தம்—போரிலிருந்து திரும்பிவந்த வீரர்கள் தினந்தினம் கலகங்கள் விளைத்தவண்ணமிருந்தனர்.

அரசிக்கும், நாட்டிலே வலுவான பிரபுக்குடும்பத்தைச் சேர்ந்த யார்க் பிரபுவுக்கும் போர் தொடங்கி விட்டது. மார்கரெட் மனப்போன போக்கிலெல்லாம் எதிர்த்திடத் திட்டமிட்டாள். மன்னனின் பித்தம் தெளியவே, மீண்டும் சாமர்செட் பிரபுக்குடும்பத்திற்கு செல்வாக்கு பிறந்தது. யார்க்குகள் விழித்தனர். போரிடத் துணிந்தனர்.

உள்நாட்டுப் போர் நடந்தது—விட்டுவிட்டு, தொடர்ந்தல்ல! முதலில் பிரபுக்களுக்குள், பிறகே எல்லோரும் கலந்துகொண்டனர்!

ஒரு கூட்டத்தவர் வெள்ளை ரோஜாவையும், மற்றொரு கூட்டத்தார், சிகப்புரோஜாவையும் அணிந்துகொண்டனர். அதனால் இது பூப் போர் என்று அழைக்கப்பட்டது.

போர் விரும்பிகள் இதனைக்கூடத் தங்களுக்குச் சாதகமாக்கிடத் துடித்தனர்.

மன்னன் சார்லஸ், கொடுங்கோலனானான். வெறிபிடித்தவன்போலாடினான். வரி, வரி என்று மக்களின் உயிரைக்குடித்தான். கோபத்தை அடக்கி வந்தனர் மக்கள். பதினொரு ஆண்டுகள்வரை, அவன் கோணல் ஆட்சியைப் பொருட்படுத்தாது விட்டு வைத்தனர். பிறகோ அவன் தலையை இழந்தான், தன் தவறுகளுக்குக் கழுவாயாக!

இந்த உள்நாட்டுப் போரைக்கூட மறப்பதில்லை அவர்கள். போருக்கு ஆதரவு திரட்டிடும் போக்கினர் இந்த உள்நாட்டுக் குழப்பத்தைக் காட்டி, இந்த நிகழ்ச்சியால் போர் இன்றியமையாததொன்று என்று முடிவுகூற முன்வருவர். நம்பமுடியாத அவர்கள் வார்த்தைகளை—நம்பக்கூடாது.

X X X

கருணை உள்ளத்தை, அன்புவெள்ளத்தைப் பெருக்கவந்த பரமபிதா ஏசுநாதரின் . தொண்டர்களுக்கும், கல்லால் அடிபட்டும், கருத்துமாறு நபிகள் நாயகத்தின் வழி வந்தோருக்கும் நடந்த போர் — கேவலம், மதப்போர்—நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறது.

பாலஸ்தீனம் முகமதியர்களின் பிடியில் சிக்கியது.

ஏசுநாதரின் கல்லறையைச் சேவிக்க சென்ற பக்த சிரோன்மணிகள் சிரமிழந்தனர். சித்திரவதைக்குள்ளாயினர். யாத்ரீகர்கள் கொள்ளையடிக்கப்பட்டனர். கொடுமைப் படுத்தப்பட்டனர்.

கேட்டது, கிருத்துவ உலகம்! பொங்கியெழுந்து போருக்குக் கிளம்பிற்று. அன்பு அறம் மறைந்துவிட்டது. ஆத்திர மறம் வென்றது.

அடித்தால், அடுத்த கன்னத்தைக் காட்டவில்லை. போரெடுத்துச் சென்று அந்த மாபாவிகளை அடக்குவோம் என்று கூவினர். அறத்தலைவர் போப்பும் அனல் தெறிக்கப் பேசினார். புனல் நடைப் பேச்சுக்கு அங்கு இடமே இல்லை.

இப்போரால் ஐரோப்பிய தேசங்களில் பல அழிந்திடும் நிலையடைந்தன. ஜெர்மனி நிலைகுலைந்தது. இத்தாலி சக்தி குறைந்து தடுமாறிற்று. சிலுவைப் போர், இந்த சகத்தோர் மனதில் பதிய வைக்கவேண்டிய போர்.

இந்துவுக்கும், முகம்மதியனுக்கும், முகம்மதியனுக்கும், கிருத்துவனுக்கும், கிருத்துவனுக்கும், அதன் உட்பிரிவைச் சேர்ந்த மற்றொரு கிருத்தவனுக்கும், புத்த மதத்தவனுக்கும், சைனமதத்தவனுக்கும், சைவனுக்கும், வைணவனுக்கும், வடகலை வைணவனுக்கும், தென்கலை வைணவனுக்கும் போர்கள் நடந்திருக்கின்றன. நாகரீக சமூகம் நாணிக் கோண வேண்டிய நிகழ்ச்சி மதத்திற்காக, மக்கள் போரிட்டனர் என்பது!

* * *

என் தேசம் ஸ்காட்லாந்து—இனி எந்த அந்நியனையும் ஆளவிடமாட்டேன். என் நாடு எனக்குப் பொன்னாடு—இதில் அயலான் அடியெடுத்து வைக்கச் சம்மதியேன். அவன் ஆணையிட்டு, என் தாயகத்தார் பணிந்து நடந்திடும் நிலையைக் காணக்கூடாது என் கண்கள்

ஆங்கிலேயர் ஆளப் பிறந்தவர்களாக இருக்கட்டும்—அவர்களோடு நாட்டோடு அந்த ஆர்ப்பாட்டம் அடங்கட்டும். அது பற்றிய அக்கறை எனக்கில்லை

எட்வர்ட்மன்னர்-அவருக்குப்படையுண்டு, பணம் உண்டு, பாக்குக்கூற ஆட்கள் உண்டு. எனக்குஅவை இல்லை. ஆனால் தணியாத சுதந்திரத் தாகம் உண்டு—நான் பிறந்த பூமி நானிலத்தோர் நகைக்கும்படி பிறர் தாள் பணியக்கூடாது என்ற தளராத உறுதி உண்டு.

பாலியலைத் தங்கள்கைப்பொம்மையாக்கி,ஸ்காட்மக்களின் உயிரான உரிமையைச் சூறையிடத் திட்டமிட்டது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பாலியலையும் எதிர்த்து ஒழித்துவிட்டால் உரிமைப் போர் செத்து மடிந்துவிடுமா? விடுதலைப் பட்டாளம் களைத்துவிடுமா?

சுதந்திர வீரன் வாலஸைத் தூக்கிலிட்டும், துளிர்த்தஎதிர்ப்பு—நினைவிலிருக்கட்டும். அடிமையின் மோகம் போய்விட்டது. இனி விடுதலை வேகம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது...

இராபர்ட் புரூஸ் இப்படி ஒரு எதிர்ப்பை ஏற்படுத்தினான். பல முறைகள் தோற்றான். துவண்டுவிடவில்லை. தொடர்ந்து போரிட்டான். இங்கிலாந்திற்கு, ஸ்காட் மக்கள் அடங்கி வாழ முடியாது என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டான்.

சொத்திழந்தான், சுற்றத்தாரைத் துயரத்தில் தள்ளினான், சுகம் துறந்தான்—காடுகளில் ஒளிந்து வாழ்ந்தான். அப்பொழுதும் கலங்கினானில்லை. அடிபணிந்திடும் சிறுமைப் புத்தி அவனுக்கு வரவில்லை. எட்வர்டு இந்த வீரனைக்கண்டு வியந்தான்—பயந்தான். அவனுக்குக் கடைசியில் வெற்றி கிடைத்தது.


**கோவை**

**பாரி நிலையம்**

12/205, ஒப்பணக்காரத்தெருவில் திறக்கப் பெற்றுள்ளது.

அண்ணாதுரை நூல்கள், கவிஞர் நூல்கள், மற்றும் இயக்கப்புத்தகங்களும்,

மு. வ. நூல்கள், சேதுப்பிள்ளை நூல்கள், மற்றும் இலக்கிய நூல்களும்,

S. S.L. C. நோட்ஸ்கள், பாடப் புத்தகங்களும் கிடைக்கும்.

அன்பர்கள் வருக!

**கோவை பாரி நிலையம்,**

கோயம்புத்தூர்.

உரிமைப் போர் நடத்திய புரூஸை உலகு பாராட்டிற்று.

பானக் பார்ன் என்ற இடத்தில் புரூஸ் ஆங்கிலப் படையை முறியடித்து, தங்கள் சுதந்திர வாழ்வை நிலைநிறுத்திக் கொண்டான்.

இந்தச் சுதந்திர வீரன் வாழ்வை—இம்மாதிரி உரிமைப்போர் வீரர்கள் வாழ்க்கைப் படப்பிடிப்புகள் பலவற்றைக்காட்டி,—போரைக் குறை சொல்லாதே, அது இல்லாமல் உலக நடவடிக்கை நிறைவேறாது என்று பேசிட முனைவர். அவர்கள் வாக்கு சாதுரியம் வாய்ந்தவர்கள் என்று பாராட்டப் படுவார்களே ஒழிய, வாழ்க்கையைச் செம்மையாக்கிடுவோர் என்று வாழ்த்தப்படமாட்டார்கள்.

X X X

ட்யூப்ளேயும், கிளைவும் இந்திய வரலாற்று ஏட்டிலே இடம் பிடித்தனர். எப்படி? இங்கு நடந்த கர்நாடக யுத்தங்களினால் தானே! முசபர் ஜங்குக்கும், நாசர் ஜங்குக்கும் பட்டமடைவதில் தகராறு என்றால் ட்யூப்ளே முன்னேறினான். கிளைவ் பின்னால் சேர்ந்து கொண்டான்.

இப்படி அவர்கள், திரைகட்டி, மறைவுப்படுதா மாட்டிச் சண்டையிட்டனர். ஆட்சியைப் பறிக்கவா? தங்கள் அந்தஸ்தை உயர்த்தவா? நாடு பிடிக்கவா? நாநிலத்தில் நமக்கு ஏது ஈடு என்று பெருமை பேசிக் கொள்ளவா? இவைகளும் காரணமாகலாம். எனினும் வணிகத் துறையிலே அவர்கள் உயரத்தான் இத்தனை பாடுபட்டுச் சண்டையிட்டனர். உள்நாட்டு மன்னர்களின் மனக் கசப்பை, எண்ண எரிச்சலாக்கி, எரிச்சலை கோப வார்த்தைகளாக மாற்றி, வெப்பமான வார்த்தைகளை, விபரீதமான போர் நடவடிக்கைகளாகத் திருத்திக் தங்கள் வாணிபத்திற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர்.

வணிகப் போட்டிகளினால் சண்டையுண்டாகத்தானே செய்யும். இதனை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று பேசுவர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## திருடர்கள் இராஜ்யம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவள் பேசினாள். அவள் குரல் மிகத் தெளிவாக ஒலித்தது.

“பெண்கள் ஆண்களோடு ஒத்த உரிமையுள்ளவர்கள். ஆனால் தொட்டிலையும், சோற்றுக் கரண்டியையும் வெறுப்பதில்லை. விரும்பி ஏற்றுள்ளார்கள். படித்தவர்கள் பாடாடோபத்தில் மூழ்கிப் பாழ்படாதவர்கள் இல்லறத்தில சிறந்தவர்கள். மணத்திலே குறைபாடுகளைக் காணமுடியாது. ஆகவே அகத்துறைக் கோளாறுகளுக்கு இடமே இல்லை. விபசாரம் இந்நாட்டு அகராதியிலே இல்லாத சொல்—புரியாத பதம்” என்றாள்.

“விருந்துண்போமா?” என்றான் சிங்காரம்.

“இதுவரை உண்டதே பெரு விருந்தாயிற்றே” என்றேன்.

“அது கருத்துக்கு!” என்றான் சிங்காரம்.

“இனி வயிற்றுக்கு—வாருங்கள்” என்று அன்போடு அழைத்தாள் சிங்காரி.

மூவரும் சென்றோம் உள்ளே.

விருந்துண்டு முடிக்கவில்லை. சிங்காரி மேலும் சில செய்திகளைப்பற்றி எனக்குத் தெளிவுரை தந்து கொண்டிருந்தாள்.

“குடும்பம் நடத்துகிறார்கள் இங்கு — மற்ற நாடுகளிலுந்தான்! கூர்ந்து கவனித்தால் பெருத்த வித்தியாசந் தோன்றும். குடும்பத் தலைவன் சம்பாதிப்பான்—தலைவி அவன் கொண்டுவரும் பணத்தை வைத்துக் கொண்டு குடும்பத்தை நடத்துவாள். பிள்ளைகள் இருந்தால், அவர்களும் இந்தத் தொகையினாலேயே தங்கள் உடல் நலத்தையும் உள்ள வளத்தையும் பெருக்கிக் கொள்வார்கள். இங்கே கணவனும் உழைப்பான். அவன் உழைப்பு மண்வெட்டி, கலப்பை உருவிலும இருக்கலாம். இல்லை பேனாவில் எழுதி முடிக்கும் எழுத்துக்களினூடும் அமையலாம். ஆட்சியாளர் அதனை ஏற்றுக்கொள்வர். அவனது மனைவி வீட்டு வேலைகளைச் செய்வாள். அரசியல் பணிமனை கண்காணித்துக் கொள்ளும். ஆகவே இருவருக்கும் வேண்டிய உணவு, உடை, உறையுள், போக்குவரத்து வாகனம், பொழுது போக்கு இடங்கள்......எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்துள்ளார்கள். பிள்ளைகளை அளவோடு பெற்றுக்கொள்ளக் கற்றுள்ளார்கள் எங்கள் தேசத்தவர்கள். அந்தப் பிள்ளைகளைப் பற்றிய கவலையும் அவர்களுக்கில்லை. சர்க்கார் பிள்ளை வளர்க்கும் கடமையை ஏற்றுக்கொள்கிறார்கள். பிள்ளைகள் வளர வளர அவர்கள் உள்ளப் பாங்கை உணர்ந்துகொள்கிறார்கள். அதற்கேற்ற முறையில் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்கள்” என்று சிங்காரி கூறினாள்.

“குழந்தை உள்ளம், முளைத்து வரும் மூங்கிலைப் போல—விருப்பம் போல் வளைத்துக்கொள்ள முடியும். ஆனால் அதன் இயற்கைப் போக்கு எப்படிப் போகிறது என்று கவனித்தே கல்வித் திட்டம் அமைக்கப் படும். ஒருவன் ஓவியக்காரனாகலாம். இன்னொருவன் கப்பலோட்டியாகலாம். ஒருவன் காவியம் எழுதலாம். பிறிதொருவன் பட்டாளத் தளபதியாகலாம்” என்று சிங்காரம் மேலும் விளக்கினான்.

“ஆகவே, மனிதனை இயந்திரமாக்கி விட்டீர்கள்!”

“இல்லை—மனிதனை மனிதனாக—மாற்றியிருக்கிறோம்” என்றனர் இருவரும்.

“அப்படியா!” என்று கேட்டேன். ஆச்சர்யம் ஆட்சி புரிந்தது அந்நேரத்தில்—என் மனதில்!




Edited Printed & Published by C. N. Annadurai M. A. at “Dravida Nadu” Press
95, Tirukkachinambi Street Kancheepuram.